# சுதந்திரப் பறவைகள்

பறவை 09 பாடல் 08 1994 கார்த்திகை அன்பளிப்பு ரூபா 5-00


# வெளிநாடு செல்லும் பெண்கள் எதிர்கொள்ளும் அவலங்கள்

வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டு பாங்கொக், மொஸ்கோ போன்ற தலைநகரங்களிற் தரித்து நிற்கும் தென்கிழக்காசியப் பெண்களை வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் விபச்சாரத்தில் ஈடுபடுத்தும் சம்பவங்கள் அதிகரித்துச் செல்கின்றன. இதில் தமிழீழப் பெண்களும் அடங்குவர். இத்தகவல் அங்கிருந்து தமிழீழத்துக்குத் திரும்பிவந்த பெண்கள் வாயிலாகப் பெறப்பட்டது.

அங்கு தங்கிநிற்கும் தென்கிழக்காசியப் பெண்கள் பெரும் அவலத்தினை எதிர்நோக்குகின்றார்கள். இதில் தமிழீழப் பெண்களும் அடங்குவர் தமிழீழத்திலிருந்து மேற்குலக நாடுகளுக்கும், மத்தியகிழக்கு நாடுகளுக்கும் வேலைவாய்ப்புத் தேடியும், திருமணவாய்ப்பின் நிமிர்த்தமும் சென்ற பெண்கள் பாங்கொக்கில் நீண்ட நாட்கள் தங்கிநிற்கின்றார்கள். பிரயாண வசதியில் தாமதங்கள், சிக்கல்கள் ஏற்பட்ட காரணத்தால் வருடக்கணக்காக சலித்துப்போன நிலையில் நிற்கும் பெண்கள் நிறையவுள்ளனர். ஏன் வந்தோம்? என்ற விரக்திநிலையில் இனி என்ன செய்யப் போகிறோம்? என்ற எதிர்காலத்தின் கேள்விக்குறியோடு நிற்கும் பெண்களின் வாழ்க்கை சோகமானது.

இந்நிலையில் தங்கிநிற்கும் பெண்களை தந்திரமாகவோ பாரிய நெருக்கடிக்குள்ளாக்கியோ வெளிநாட்டு உல்லாசப்பயணிகள் விபச்சாரத்திலீடுபடுத்தி வருகிறார்கள் என்பது அதிர்ச்சியூட்டக்கூடிய விடயம். ஆனால் உண்மையான சோகச்சம்பவங்கள் நிறையவே நடந்துள்ளன.

தற்போது மேற்குலக நாடுகளில் பாரிய பிரச்சனையாக உருவெடுத்துள்ள 'எயிட்ஸ்' நோயின் தாக்கம் தென்கிழக்காசிய நாடுகளைப் பொறுத்தவரை மொல்ல அரும்புகிறதேதவிர பாரிய தாக்கத்தை விளைவிக்கவில்லை. இந்த நிலையில் ஆசிய நாட்டவருடன் தொடர்புகளை வைத்துக் கொள்ளலானது 'எயிட்ஸ்' நோய் பரவும் சாத்தியக்கூறினை குறைவாகவே ஏற்படுத்தும் என்றமையால் இவர்களைத் தமது பாலியற் தேவைக்குப் பயன்படுத்துகின்றார்கள்.

முதலில் அங்கு தங்கி நிற்கும் தமிழீழப் பெண்களின் வெளித்தொடர்புவசதிகளையும், பொருளாதார உதவிகளையும் துண்டித்து விடுகிறார்கள். இதனால் நிர்க்கதியாய் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் தவிக்கும் இத்தகைய பெண்கள் நாளடைவில் பொருளாதாரக்கஷ்டத்தை எதிர்நோக்குகின்றார்கள். அடுத்த வேளை உணவுக்கு வசதியற்ற நிலை, வாழ்க்கைச் செலவுகளைத் சமாளிக்க முடியாத திண்டாட்டம், இதன் மத்தியில் தவிக்கும் இத்தகைய பெண்கள் நாளடைவில் பலவந்தமாக, விரும்பியோ விரும்பாமலோ இத்தகைய செயல்களில் ஈடுபடுவதற்கு நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள் என்பது மிகவும் பரிதாபத்துக்குரிய விடயம்.

இதில் குறிப்பிடக்கூடிய விடயம் என்னவென்றால் இச்சம்பவங்கள் பலவற்றை எமது சமுதாயம் கேள்விப்பட்டிருக்கிறது. எமது பெண்கள் இவ்வாறான அவலங்களுக்கு உட்படுகின்றார்கள் என்பது தெரிந்தும் இன்னும் எமது பெற்றோர் உறுதியான பிரயாண ஒழுங்குகளற்ற நிலையில் தம் பெண் பிள்ளைகளை அனுப்பிக்கொண்டிருக்கின்றார்கள். வெளிநாட்டு மணமகன்களுக்காக சென்ற எத்தனையோ மணப்பெண்கள் இத்தகைய அவலமான வாழ்வை வாழ்ந்து கொண்டு மனம் விரக்தியுற்ற நிலையில் நிற்கிறார்கள். இச்சம்பவங்களைத் தெரிந்துகொண்டும் "தூரத்துப் பசசை" என்று போய் இருந்த நிம்மதியையும் இழந்த பெண்களின் சம்பவங்களைப் பெற்றோர் அறிந்து தமது பெண் பிள்ளைகளின் வாழ்வை வளமாக்குவதில் கூடிய கவனத்தோடும் பொறுப்புணர்வோடும் நடப்பார்களாக.


உள்ளே -

★ முழங்காமல், மழை பொழியாமல் ஒருமின்னல்'

★ சிறுகதை

★ நெஞ்சம் சுமக்கும். நினைவுகள்.

★ வெளிச்சத்துக்கு வந்தவை.

★ மனநோயினால் ஆண்களை விட பெண்களே அதிகம் பாதிப்படைவு.

★ நெஞ்சில் நெருப்பெரிக்கும்.





விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பின் அதிகாரபூர்வ ஏடு

எங்கள் பார்வையில்...

# இது அடுத்த பக்க வளர்ச்சி

இருள் படிந்துபோன எமது சமுதாய அமைப்பிலிருந்து மெல்ல எழுந்த பெண்கள் அலையொன்று தன் வளர்ச்சிப்பாதையில் நம்பிக்கையூட்டிக்கொண்டிருக்கிறது. இந்த மண்ணின் விடுதலையை வென்றெடுக்கும் போராட்டத்தின் மூலமே பெண்களும் தங்கள் உரிமைகளை வென்றெடுக்கமுடியும் என்ற கொள்கையில் இது உறுதியாக நிற்கின்றது.

பெண்கள் இந்த மண்மீட்புப் போராட்டத்தில் பெரியதொரு படையணியாய் வளர்ந்துள்ளனர். இத்தகைய படையணியில் இந்த மண்ணைமீட்டெடுக்கும் முயற்சியில் இதுவரையும் ஐந்நூற்றுப்பத்தொன்பது பெண்கள் மாவீரராகியுள்ளனர். எத்தனையோ தியாக வரலாறுகளையும் ஒப்பற்ற சாதனைகளையும் இவர்கள் சாதித்துச்சென்றுள்ளனர். எமது வேலிப்பாரம்பரியங்களைத்' தாண்டிக்கொண்டு வந்த இவர்கள் எழுதிச்சென்ற தியாகவரலாறுகள் பெண்கள் சமுதாயத்தில் பெண்களைப் பற்றிய பார்வையில் மிகப்பெரிய மாற்றத்தையும் நம்பிக்கையையும் விதைத்துள்ளது.

இதில் முக்கிய திருப்புமுனையாக நடைபெற்ற பெண் கடற்கரும்புலிகளின் சாதனைகள் உலகப் பத்திரிகைகளிற் பேசப்பட்ட விடயம். வியப்பில் ஆழ்த்திய செயல். கடற்கரைக்கே பெண்கள் செல்ல அனுமதிக்கப்படாத சமூகத்திலிருந்தும், கடலில் படகு ஓட்டுவதையே நினைத்துப்பார்க்கமுடியாத எமது பாரம்பரியத்திலிருந்தும் வந்த பெண்கள் அணியொன்று தன்னை நோக்கிய பாதையில் மிகப்பெரிய வெற்றியைப்படைத்திருக்கிறது. எதிரியின் முள்ளந்தண்டாய் நிற்கும் பிரதேசத்திற்குள் சென்று இலக்குகளைத் தகர்க்கும் முயற்சியில் சாதனை படைத்திருக்கிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக அண்மையில் வெற்றிலைக்கேணியில் மகளிர் படையணி நடாத்திய அதிரடித்தாக்குதலானது; தனித்த அதன் வளர்ச்சியில் நம்பிக்கையையும் அபாரதுணிச்சலையும் காட்டி நிற்கிறது. 09-11-94 அன்று நடைபெற்ற இத்தாக்குதல் நடவடிக்கையில் இராணுவ அதிகாரி உட்பட ஐந்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இத்தாக்குதலை மகளிர்படையணியே முற்று முழுதாக பங்கேற்றி நடாத்தியது. வித்தியாசமான அனுபவம். படை நகர்த்தி திட்டமிட்டதில் இது அடுத்த பக்க வளர்ச்சி, ஏறத்தாழ பத்தாண்டுகால வரலாற்றில் புதிய பரிமாணம்.

எமது சமுதாயத்தில் ஆழவேரோடிப்போயுள்ள பெண்களைப் பற்றிய பிற்போக்குத்தனமான பார்வைகளைப் பொய்யாக்கிக்கொண்ட விடுதலைப்புலிகள் மகளிர் படையணியின் செயற்பாடுகள் எமது சமுதாயத்தில் நம்பிக்கையை வளரச் செய்யும் என்பது திண்ணம்.''

## மனநோயினால் ...

தாக்கங்களால் பாதிக்கப்படுவதற்கு தாழ்வு மனப்பான்மையே காரணமாகும். இத்தாக்கங்கள் விவாகமான பெண்களிலும், அதிக பிள்ளைகளைப் பெறும் பெண்களிலும் கூடியளவு காணப்படுகிறது.

வீட்டுக்கு வெளியே வேலை செய்யும் ஒரு பெண் வேறு உதவியின்றித் தனது குழந்தையை பராமரிக்கும் பொறுப்புள்ளவளாகவிருந்தாலும் அவளது உளநிலை பாதிப்படைவது அதிகரிக்கும். ஆனால் குழந்தையைப் பராமரிக்க உதவியாள் இருந்தாலும் அவளது கணவன் பங்கு கொண்டாலும் வேலை செய்யும் பெண்களின் உளநிலைப் பாதிப்புக் குறைவடைகின்றது. என்பதை ஆய்வுகள் காட்டுகின்றன.

விரிவாக்கம் அடைந்த நாடுகளில் பெண்கள் கூடுதலாக வெளியில் வேலைகளுக்கு சென்றாலும், வீட்டு வேலைகளில் முதன்மையான மாற்றங்கள் ஏதும் இல்லை என அவ்வறிக்கை தெரிவிக்கின்றது வேலை செய்யும் பெண்கள் மூன்று மணி நேரம் வீட்டு வேலைகளிலும் 50 நிமிடங்கள் பிள்ளைகளுடனும் செலவிடுகின்றார்கள். ஆண்கள் 17 நிமிடங்கள் வீட்டு வேலையிலும் 12 நிமிடங்களே பிள்ளைகளுடனும் செலவிடுகின்றார்கள் அதே வேலை வேலை செய்யும் ஆண்கள் பெண்களைவிட தொலைக்காட்சி பார்ப்பார்கள். அத்துடன் உறக்கத்தில் ½ மணித்தியாலம் கூடுதலாகவும் உணவுஉட்கொள்வதற்கும் கூடுதலான நேரத்தை செலவிடுகிறார்கள்.

வறுமைக்கும், குறைந்த வாழ்க்கைத் தரத்துக்கும் மனோநிலைச்சிக்கல்களுடன் தொடர்பு உண்டு. பெண்கள் குறைந்த வருமானமுடைய தனிப் பெற்றோராக இருப்பின் அவர்கள் மன விரக்திக்குள்ளாகி மனத்தாழ்வு ஏற்படக் கூடியவர்களாகுவார்கள். துன்பத்திலுள்ளவர்களுக்கு சார்பாக இருப்பது மக்கட்குழு இணைப்புத்திட்டங்களானாலும் அதேவேளை அந்த ஏழைப் பொண்ணும் அவளது உறவினரும் சிநேகிதரும் கூட அதே நிலையில் இருந்தால் அது தொடர்ச்சியான நெருக்கடி நிலைமையையே உருவாக்கும்.

மணமான பின் ஏற்படும் வன்முறைகள் மற்றும் துஷ்பிரயோகச் சிக்கல்களால் பெண்ணின் மனோநிலை பாதிப்பு அடையலாம். ஐக்கிய அமெரிக்காவிலுள்ள அரைவாசிக் குடும்பங்களில் வன்முறைகள் காணப்படுவதோடு ஆண்டொன்றுக்கு 20 இலட்சம் மனைவிமார் உருக்குலைந்து சீரழிந்து காணப்படுகின்றார்கள். ஆண்களின் இம்சைகாரணமாக பெண்கள் அதிர்ச்சிக்கும் உள்ளாகி மனோநிலை பாதிக்கப்பட்டு உதவியற்று நிற்கின்றார்கள். குடும்ப அங்கத்தவர்களினாலேயே 10 க்கு 9 வீத பாலியல் வன்முறைகளும், உடற் தாக்கங்களும் ஏற்படுவதாக மனோவியல் நோயாளர் மூலம் அறியக்கூடியதாக இருக்கின்றது.

பாலியல் வன்முறைகளினால் பாதிக்கப்பட்டவர்கள் பதற்றத்தினால் தாக்கம் அடைந்தவர்களாகவும், முழு உடம்பழிவுடையவர்களாகவும், சித்தப் பிரமையுள்ளவர்களாகவும் காட்சி அளிக்கிறார்கள். வாழ்நாளில் ஆறு பெண்களுக்கு ஒருவர் வீதம் கற்பு அழிக்கப்பட்டதாகக் காணப்படுகின்றார்கள் என அவ்வறிக்கை கூறுகின்றது. இளம் பராயத்தில் ஆண்களை விட அதிகமாக பெண்களே பிழையான அல்லது தவறான நடத்தையில் ஈடுபடுத்தப்படுகின்றார்கள். 1/5 பங்கு வழிதவறிய பிள்ளைகள் பாரிய உளவியல் தாக்கங்களுக்கு உள்ளாக்கிக் காணப்படுகிறார்கள். பாலியல்முறையில் தவறுவிட்ட பெண்பிள்ளைகள் மற்றப்பிள்ளைகளை விட மும்மடங்கு பாதிப்பு அடைந்தவர்களாகக் காணப்படுகிறார்கள். உடல் முறைமையாக தாங்களே தங்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தக் கூடிய மனோநிலையிற் காணப்படுகிறார்கள். அவர்கள் அகவை வந்தபின்கூடியளவு பாலியல் சிக்கலுக்கும், மயக்கப்பொருள் பாவனைக்கும் ஆளாகின்றார்கள். உலக சுகாதாரஅமைப்பின் அறிக்கைப்படி தவறு விட்டது அதிகமான யுவதிகள் பெண்களும் விரக்தியின் விளிம்பிற்குச் சென்றவர்களாகவும் உள்ளார்கள், இது ''முழுக்கமுழுக்க விளங்கக் கூடியதும் உண்மை நிலையும்'' ஆகும்.

பெற்றோர் ஆகும் நிலையை அடையும்பொழுது ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரு நெருக்கடி நிலை ஏற்படுகின்றது. ஆனால் கருத்தரிக்கும் பொழுது ஒரு பெண்ணுக்கும் மேலும் நெருக்கடி ஏற்படுகிறது. கருச்சிதைவு, உரிய காலத்திற்கு முன் பிள்ளைகள பிறப்பது, சாவடைந்து பிறப்பது போன்றவற்றால் ஒரு பெண்ணின் மனோநிலை அல்லது உணர்ச்சி பல ஆண்டுகளுக்குப் பாதிப்படைகின்றது. தாய்மையடையும் போது ஒரு பெண்ணின் வாழ்வில் முக்கிய மாற்றங்கள் ஏற்படுகின்றது. ''பிள்ளைபிறந்து 12 மாதங்கள்வரை உளமுறைமையான தாக்கங்களால் தாய் துன்பப்படநேரிடுகின்றது'' என அவ்வறிக்கை கூறுகின்றது. முந்திய இரு ஆண்டுகளை விடப்பிள்ளை பிறந்த ஒரு மாதத்திற்குள் பெண்கள் மனநோய் காரணமாக ஆண்களைவிட 22 முறை மனநோய் ஆஸ்பத்திரிக்குச் செல்வதைக் காணக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றது என ஆய்வு தெரிவிக்கின்றது.

குழந்தை பிறந்த பின் பாதிப்புக்கள் உள் எனக்கூறும் உலகசுகாதார அமைப்பு குழந்தை பிறந்த பின் பாதிப்பைத் தவிர்ப்பதற்கு மக்களாய் அமைப்புக்கள் முன்வந்து வழிகாட்ட வேண்டும் எனக்கோரியுள்ளது. ஆறு முதல் 9 மாதம் வரை 10 குழந்தைகளில் 1 குழந்தை உள்ளத்தாக்கத்துக்குளளான தாயாரினாலேயே கவனித்து வளர்ப்படுகிறது.

வாழ்க்கையில் முதிர்ச்சியிலும் கூடப் பெண்கள் மீண்டும் மனநிலைப் பாதிப்புகளுக்கு உள்ளாகின்றார்கள். பெண்கள் ஆண்களைவிடக் கூடிய காலத்திற்கு சீவிக்கிறார்கள். முன்னேறியுள்ள உலகில் கூடிய தொகையினரான பெண்கள் எழுபத்தைந்து அகவையில் விதவையாகித் தனிமையில் வாழ்கிறார்கள். எண்பத்தைந்து அகவைக்கு மேலாக வாழ்ந்து வரும் மக்களில் 25 விகிதமானோர் குணப்படுத்த முடியாத நோய்க்கு ஆளாகின்றார்கள். அவர்களில் பெண்களே அதிகமனோர்.

''அதிகமான பெண்களின் சுகாதாரம் நேரத்திற்கு நேரம் நிவர்த்தி அடைகிறது என ஆச்சரியப்படுவதற்கு ஒற்றுமை இல்லை". ஆனால் நெருக்கடி நிலையை உருவாக்கும் சுகாதாரச் சிக்கல்கள் கூடுதலாகப் பெண்களைக் கடுமையாகப் பாதிப்பதில்லை என்பது ஆச்சரியத்திற்குரியது என அந்த அறிக்கை முடிவடைகிறது.

**நன்றி: தேர்ந்த கட்டுரைகள்**

அண்மையில் புதுடில்லியில் நடாத்தப்பட்ட உலக ஸ்நூக்கர் வீராங்கனைப் போட்டியில் பிரித்தானியாவைச் சேர்ந்த அசலின் பிசர் என்ற பெண், வீராங்கனையாக வாகை சூடினார். இவர் மொத்தமாக ஏழு உலக வீராங்கனைப் பட்டங்களை வென்றிருக்கின்றார்.

**தகவல்: முத்தாரத்திலிருந்து**

# முழங்காமல்,மழை பொழியாமல் ஒரு "மின்னல்"

இப்பதான் ஆனையிறவிலை அடைபட்டுக்கிடந்து வெளியில வந்தம். அதுக்கிடையில திரும்பவும் பஸ்ஸில அடைபட்டுப்போனம்''

''பரவாயில்லை, அடுத்ததா இனிக்காட்டிலே அடைபடப் போறாய்''

''காட்டிலை ஓரேயடியாய் பெட்டிக்குள்ளையும் அடைபட்டுத்தான் வருவன்''

இந்த உரையாடலைக் கேட்டு, ஏராளமான பெண் போராளிகளை, அவரவரின் படைக்கலன்களுடன் தன்னுள் அடைத்துசென்ற அந்தப் பேருந்தே கொல்லென்று பெரும் சத்தத்துடன் சிரித்தது

★ ............ ★

நாம் பயணம் செய்த பேருந்து போகும்வழியில் காற்றுப்போய் நின்று விட்டது. எமக்குப் பின்னே வந்த பேருந்தில் வந்து கொண்டிருந்த போராளிகள் எம்மைப் பார்த்து,

''எங்களை முந்திக்கொண்டு வந்தனீங்கள், இப்ப நில்லுங்கோ. நாங்கள் போய் ஆமியோடை சண்டைபிடிக்கிறம். நீங்கள் காத்துப்போன ரயரோடை சண்டைபிடியுங்கோ''

என்று கேலி செய்துவிட்டுப் போனார்கள். எம்மை ஏற்ற வேறொரு வாகனம் வரும் என்று எமக்கு அறிவிக்கப்பட்டதால், நாம் அருகிலுள்ள தளம் ஒன்றிலே போய் நின்றோம். அங்கே நின்றபோது உழவு இயந்திரம் வந்தது. நாம் விழுந்தடித்துக்கொண்டு அதில் ஏறுவதற்காக ஓடிப் போனோம். இந்த வாகனம் எமக்கில்லை, வேறொரு அணியினரை ஏற்ற என்று கூறப்பட்டதால், நாம் ஏமாற்றத்துடன் திரும்பினோம். ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு மரங்களின் நிழல்களிலே அமர்ந்திருந்தோம்.

மதியமாகியும் ஒரு வாகனமும் வரவில்லை. நாங்கள் எங்கள் துப்பாக்கிகளைச் சுத்தம் செய்துவிட்டு, நாங்களும் முகங்களைக் கழுவிவிட்டுக் காத்திருந்தோம். மாலையில் ஒரு உழவு இயந்திரம் வரவே மீண்டும் பழைய உற்சாகம் எம்மைத் தொற்றிக்கொள்ள விழுந்தடித்து ஓடிப்போய் அதில் ஏறிக்கொண்டோம். நாங்கள் எல்லோரும் ஏறுவதற்கு அதில் இடமில்லை. ஆனாலும் ஏ...றி னோம் ஒருவரை ஒருவர் பிடித்தபடி, தோளில் துப்பாக்கியைத் தொங்கவிட்டபடி, சும்மா விண்வெளியிலே மிதப்பது போலப் போனோம். உழவு இயந்திரம் பள்ளங்களில் விழுந்து எழும்பும்போது, புவியின் ஈர்ப்பு விசை எல்லைக்கு அப்பால் நடக்கும்போது எப்படி விழுந்து எழுவோமோ, அப்படியெல்லாம், அல்லது அதையும்விட மோசமாக விழுந்து எழும்பி எழும்பி விழுந்து விழுமுன் எழுந்து .. எழமுன் விழுந்து...... அந்த உழவு இயந்திரப் பயணத்தைப்பற்றி மட்டுமே நூறு இருநூறு பக்கங்களில் கவிதை எழுதலாம். அந்த அற்புதமான பயணம் அது.

ஓரிடத்தில் நாம் போய்க்கொண்டிருந்தபோது தலைக்குமேலே குண்டுவீச்சு விமானம் வந்துவிட்டது. உடனேயே எல்லோரும் வாகனத்தை விட்டுக் குதித்து, அருகேயுள்ள பற்றைகளுக்குள் பாதுகாப்பு நிலைகளை எடுத்துக் கொண்டோம். பலகாலம் யாருடைய நட்பும் கிடைக்காமல், ஏங்கித் தவித்திருந்த அந்த முட்பற்றைகள், எம்மை ஆவலோடு வரவேற்று ஆரத் தழுவிக்கொண்டதில் எல்லோருடைய உடலெல்லாம் கீறல் காயங்கள். குருதி கசிந்தது. போனால் போகட்டும். நாம் பிறந்து வளர்ந்த அதே மண்ணிலேதான் அந்தப் பற்றைகளும் வேரோடிப் போயிருக்கின்றன அல்லவா அவற்றுக்கு எம்மீது அலாதி அன்பு ஏற்படுவதில் வியப்பு ஒன்றும் இல்லையே.

★ – ......... ★

மணலாற்றை நாம் வந்தடைந்துவிட்டோம். சண்டை நடைபெற்ற இடத்திலிருந்து நீண்ட தூரத்துக்கு அப்பாலேயே எம்மை நிறுத்திவிட்டார்கள். எமக்குப் பெரிய ஏமாற்றமாகப் போய் விட்டது. பின்னர் சில தேவைகளுக்காக, எமது இரண்டு அணிகள் அதே இடத்திலேயே நிறுத்தப்பட்டு, ஏனைய அணிகள் சண்டை நடக்கும் இடத்துக்கு அனுப்பப்பட்டன.

சண்டை தொடங்கி, ஓயும் வரை குண்டு வீச்சு விமானங்களும் கடற்படைக் கப்பல்களும் இடைவிடாது தாக்கிக் கொண்டேயிருந்தன. இப்படியே சில நாள் சண்டை முடிந்தபின் எமது அணிகள் காட்டுக்குள் வருமாறு அழைக்கப்பட்டன. காட்டுக்குள்ளே நாம் வேறு வேறு அணிகளாகப் பிரிக்கப்பட்டோம்.

அழைப்புக் கிடைத்ததும் ஒரு ஒற்றையடிப் பாதையால் நாம் முன்னேறினோம் நாம் போனபாதைகளில் காப்பகழிகள் வெட்டப்பட்டு, அவை உருமறைப்புச் செய்யப்பட்டிருந்தன. முதல் நாள் நல்ல மழை பெய்ததால் பாதையெல்லாம் ஒரே சேறும் சகதியுமாக இருந்தது. எல்லாவற்றையும்விட, நாம் போனது இரவில் இருட்டாக இருந்தது.

திடீரென எமக்குப் பின்னால் 'சளக்' என்று ஒரு சத்தம் என்னவென்று திரும்பிப் பார்த்தால் ஒருத்தி காப்பகழிக்குள் விழுந்து போயிருந்தாள். அவளருகே வந்த இன்னொருத்தி.

''என்னடி நீ? அப் அப்''

என்று கேலி செய்தவாறு தூக்கிவிட்டாள். மீண்டும் இருளிலே ஒருவர் கையை ஒருவர் பிடித்தவாறு ஒருவர் பின் ஒருவராக நகர்ந்து கொண்டிருந்தோம். சிறிது தூரம் போனதும் உழவு இயந்திரத்தின் சக்கரங்கள் போய் வரும் இடத்தில் சேறு மிக ஆழமாக இருந்தது. நாம் தெரியாத்தனமாக அதற்குள் கால் வைத்துவிட்டு எடுக்க முடியாமல் இழுபட, எம்மை இழுக்கவென வந்தவர்களின் கால்களும் சேற்றிலேபுதைய . ஒருவாறு இழுபறிப்பட்டு அந்தப் பாதையைக் கடந்து முடிக்கமுன் எல்லோர் உடல்களிலும் சேறு தாராளமாக அப்பிக்கொண்டது.

எல்லோருக்கும் பயங்கரத் தண்ணீர் விடாய். எமக்குத் தண்ணீரும் இல்லை உணவும் இல்லை. இரண்டு நாள் பட்டினியின் பின் மூன்றாம் நாள் பாணும் பருப்புக் கறியும் வந்து சேர்ந்தது. ஆனால் தண்ணீர் வரவில்லை. நீரைப்பற்றிக் கவலைப்பட்டு யோசிக்குமளவில் யாருமே இருக்கவில்லை. மளமளவென்று சாப்பிட்டு முடித்துவிட்டு எமக்குரிய நிலைகளில் போய் நின்று கொண்டோம். நீண்ட நேரத்தின் பின் ஒரு கானில் கால்வாசியளவு நீர் வந்தது. குடிப்பதற்கு அந்த நீர் போதாதாகையால் நாக்கையும் தொண்டையையும் மட்டும் நனைத்துக்கொண்டோம்.

சண்டை தொடர்ந்து நடந்துகொண்டேயிருந்தது. ஒரு அருவியருகில் நாம் நிலையெடுத்திருந்தோம். அருவிக்கரையோரமாக சில உருவங்கள் மின்சூழ்விளக்குடன் நகர்ந்தன. எமது ஆண்போராளிகளின் வேவுஅணி, எதிரியை வேவு எடுப்பதற்காகப் போகி

**ஜெயஜோதி**

ன்றது என்று நினைத்து விட்டு நாம் அமைதியாயிருந்தோம். ஆனால் திடீரென ஏதோ ஓர் ஐயமேற்பட்டு கூர்ந்து கவனித்ததில், அது இலங்கை இராணுவச் சிப்பாய்களின் அணி என்பதை இனங்கண்டு கொண்டோம்.

நாம் அவர்களைத் தாக்கத் தொடங்கினோம். அவர்களும் எம்மைத்தாக்கினார்கள். எமது தாக்குதல் பலமாக இருந்ததால் எதிரிகளின் தாக்குதல் ஓய்ந்தது.

நாம் காப்பகழிகளை வெட்ட வேண்டிவந்தது. ஏற்கனவே காய்த்துப்போயிருந்த எமது கைகள் தொடர்ந்ததும் காப்பகழிகளை வெட்டிக் கொண்டிருந்தால் மேலும் உரமேறின.

ஒருத்தி சொன்னாள்.

''என்னடி? எங்கை போனாலும் இதே பல்லவி தான்''

அதற்கு மற்றவள் சொன்னாள்.

''பல்லவி பழசு எண்டாலும், ஒவ்வொருமுறையும் ஒரு இன்ரறெஸ்ற்இருக்குத் தானே''

ஒரு காப்பகழியிலே பெரும்பாலும் இருவர் இருப்போம். சண்டை ஓயும் நேரங்களில் பம்பல் அடிப்போம். சற்று முன் எம்மோடு காப்பகழியில் நின்று சண்டைபிடித்த தோழி வீரச்சாவு அடைந்ததைப்பற்றிக் கதைப்போம். அப்போதெல்லாம் ஆத்திரம்வரும், ஆவேசம் கூடும். அந்த நேரங்களில் முன்னேறும் முயற்சிகளில் இராணுவம் இறங்கினால் மிக உக்கிரமாகத் தாங்குவோம். எதிரியை அழித்துப் பின்வாங்கச் செய்து எம் கோபத்தைக் குறைத்துக் கொள்வோம்.

சண்டை நடந்து கொண்டிருந்தபோது மழையும் பெய்தது. எறிகணை மழையிலே நனைந்துகொண்டிருந்த நாம் இந்த மழையிலும் நனைந்தோம். கைவசம் நாம் கொண்டுவந்திருந்த சாரங்களைப் போராளிகளின் காயங்களைக் கட்டப் பயன்படுத்தியதால் எம்மைத் துடைப்பதற்கு ஒரு துணிகூட எம்மிடம் இல்லை. இரவு நேரங்களில் காவற்கடமைகளில் நிற்பவர் தவிர்ந்த ஏனையவர்கள், உணவு சுற்றி வந்த தாளை தலைக்கு விரித்துவிட்டுப்படுப்போம். நித்திரை வராது. நாங்களும் ஈரம். நிலமும் ஈரம். எப்படி நித்திரை வரும்? ஒரே அலுப்பாக இருப்பதால் அப்படியே படுத்திருப்போம். இரவு நேரங்களில் எதிரி எறிகணைகளை ஏவினால் நாம் கட்டாயம் காப்பகழிக்குள் போகவேண்டும் போகாமல் வெளியிலேயே நிற்போமானால் எமது பக்க இழப்பு அதிகரிக்கும். நித்திரையும் வராமல் ஈரத்தில் படுத்திருக்கும் நேரங்களில் ஏறிகணைகள் ஏவப்பட்டால் எழும்பி நடந்து போய் இறங்குவதை நினைக்கவே அலுப்பாக இருக்கும். ஆனால் காப்பகழிக்குள் இறங் காவிட்டால், அடுத்த நாள் முழுவதுமே காப்பகழியில் அடைக்கலம்(தண்டனை) புகவேண்டும். எதிரியின் எறிகணைக்கு வேண்டுமானால் நாங்கள் பதில் சொல்லலாம். ஆனால் உயிராபத்து ஏற்படக் கூடிய நேரங்களில் நாங்கள் கவனக்குறைவாக நடந்து கொண்டால், அதைப் பற்றி எமது பொறுப்பாளர்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்வது கடினம்.

காவற்கடமை நேரத்தில் நேரம் பாரக்கமுடியாது. நேரம் பார்ப்பதற்காக சிறிய வெளிச்சத்தை உண்டு பண்ணினாலும் அது எதிரிக்குத் தெரிந்துவிடும். ஏனென்றால் எமக்கும் எதிரிக்குமிடையே ஏறத்தாழ நூறு யார்கள் இடைவெளிதான் இருந்தது. நாம் நிற்குமிடம் எதிரிக்குத் தெரிந்தால் எறிகணைகளை ஏவியே நாம் நின்ற இடத்தைச் சுத்தம் செய்துவிடுவார்கள். எனவே கடமையில் நிற்பவர் ஒன்றிலிருந்து ஆயிரத்து ஐநூறுவரை ஆறுதலாக எண்ணிவிட்டு, அடுத்தவரை எழுப்புவார். மற்றவரும் இந்த முறையிலேயே அடுத்தவரை எழுப்புவார்.

பெரும்பாலும் ஒருபோராளி நான்கைந்து தடவைகளை அப்படி எண்ண வேண்டிவரும். ஆனால் இந்தமுறையில் நாம் காவலில் நின்ற நாட்கள் குறைவு என்வே சொல்ல வேண்டும். ஏனென்றால் பல நாட்கள் நாங்கள் இரவு முழுவதுமே விழித்திருக்கவேண்டி வரும்.

ஒரு நாள் எமது பெண் போராளி ஒருவர் தனது நிலைக்கு அடுத்த நிலையிலுள்ள போராளிகளுக்குக் குடிப்பதற் நீர் எடுத்துச் சென்றபோது எம்மை வேவு பார்க்கவென எமக்குள் ஊடுருவ முயன்ற எதிரி ஒருவன் கண்டு விட்டான்.

''தங்கச்சி இங்கே வா' என்று அந்தப் போராளியை அழைத்தான். இவள் உடனேயே கீழேபடுத்து நிலையெடுத்துக்கொண்டு அவனைச் சுட்டுவிட்டாள். எதிரி இறந்துவிட்டான். ஆனால் எம்மை நோக்கி எறிகணைவீச்சுநடாத்தப்பட்டது.

அந்த இடத்தில் நிலை அமைப்பதென்பது மிகவும் சிக்கலாகப் போய்விட்டது மண்மட்டத்தோடு ஏராளமான மரவேர்கள். அதைவிட அந்த மண்ணோ இறுகிப் பாறையாயிருந்தது. அத்துடன் நிலைகளை அமைப்பதற்குரிய ஆயுதங்களும் எம்மிடம் போதியளவு இல்லை பக்கத்தில் நின்ற அணி தனக்குரிய நிலைகளை வெட்டிவிட்டு மண் அள்ளிக்கொண்டிருக்கும்போது நாம் ஓடிப் போய் ஆயுதங்களை எடுத்து வந்து வெட்டுவோம். பின் நாம் மண் அள்ள. அவர்கள் வெட்டுவார்கள். இப்படி கஸ்ரப்பட்டுத்தான் நிலைகளை வெட்டினோம். இந்த அழகில், ஐந்து நிமிட நேரத்துக்குள் ஏறத்தாழ நூறு எறிகணைகளையாவது எதிரி எம்மை நோக்கி ஏவுவான். அந்த எறிகணைகள்பட்டு மரங்கள் சரிந்து விழும். அல்லது எம்மவர்கள் விழுவார்கள். இந்த இரண்டுமே மாறி மாறி நடந்தன.

ஒரு நாள் எமக்கு சாப்பாடு வரவேயில்லை. இரண்டு நாட்களுக்குமுன் எமக்கு வந்த பயத்தம் உருண்டையும் எள்ளுப்பாகும் பழுது என்பதால் ஒரு பையினுள்போட்டு நிலத்தினுள் புதைத்திருந்தோம். இப்போது அதைக்கிண்டிஎடுத்துப் பார்த்தால், அது பூஞ்சணம் பிடித்துப்போயிருந்தது. பூஞ்சணத்தைப்பற்றி யார் கவலைப்படுவது? மளமளவென எல்லோரும் அதைச் சாப்பிட்டு முடித்தோம். ஏனென்றால் சண்டை நேரங்களில் நாம் சாப்பிடாமல் விட்டு எம் உடல் பலவீனம் அடைந்தால் எமது இலக்குகள் குறிதவறிப்போகலாம் அல்லவா?

இதற்கிடையில் ஒரு சம்பவத்தைக் குறிப்பிடவேண்டும். எமது நீண்டகால உறுப்பினர்களுள் ஒருவர் (வயதில், உருவத்தில் பெரியவர் என்பதால் அவரை நாம் அப்பா என்றுதான் அழைப்போம்) கையில் ஒரு நீண்டதடியுடன் சண்டை நேரங்களில் எம் பின்னே நிற்பார். தலைக்கு மேலே குண்டுவீச்சு விமானங்கள் வரும் போதும் எதிரியால் எறிகணைகள் ஏவப்படும்போதும் நாம் மறைவுக்குச் சென்று பாதுகாப்பாக இருக்க வேண்டும். நாங்கள் யாராவது அப்படி மறைவுக்குப் போகத் தவறினால், அதை அவர் கண்டு விட்டால், எம் நிலை படுமோசமாகிவிடும். தன் கையிலுள்ள நீண்ட பிரம்பினால் ஒரு விசுக்கு விசுக்கினால், அந்த அடி பதினைந்து பேருக்குப் படும். மேலே குண்டுவீச்சு விமானம் வந்தால் அவர் எச்சரிப்பார். அவர் எச்சரித்தவுடனேயே நாம் (அடிக்குப் பயத்தில்) மறைவுக்குப்போய் விடுவோம்.

(10ஆம் பக்கம் பார்க்க)

சிறுகதை

# இனி நாங்கள் அழமாட்டோம்

சுதாமதி

அம்மா இப்போதெல்லாம் அந்தக் கடல்களுக்கப்பால் தெரியும் சிறு தீவைப் பார்த்தபடி நிற்பாள். குவியலாகத் தெரியும் பனைகளுக்கப்பால் ஒற்றையாய் உயர்ந்து நிற்கும் தென்னைமரத்தில் அவள் கண்கள் எதையோ, தேடுவதைப்போல ஆர்வமாக விரியும். அதுதான் தனது வீட்டில் நிற்கும் ஒற்றை உயரச் செவ்விளநீர் மரமோ' அங்கிருந்து வெடிகுண்டுகளின் ஓசையாற் சிதறுப்பட்டு வரும் காகங்களைப் பரிதாபமாகப் பார்ப்பாள். திடீரெனக் கண்ள்க கலங்கித்தவிக்கும். கால்களை நனைத்தபடி கரைவந்து மண் அள்ளும் அலைகள் அவளைத் திடீரென இவ்வுலகத்துக்கு கொண்டுவரும். கைகள் பரபரப்பாகி உப்புநீரில் ஊறிப்போன தென்னம் பொச்சுக்களைப் பிழிந்து கரையிலெறியும்.

"செல்லம்மா" எடிபிள்ளை உன்னைத்தான்"

செல்லாச்சிக்கிழவியின் குரல் அவளை உலுப்பியது. செல்லாச்சிக்கிழவி இப்படித்தான். யாரும் பக்கத்திலை நிண்டாலும் அவள் கூப்பிடுவது ஊரைக்கூட்டும். மற்றவையள் எல்லோருக்கும் காது கேளாது என்று நினைக்குதோ என்னவோ அவள் மெதுவாகக் கதைப்பதில்லை.

"உண்ணாணைக்கேக்கிறன் ஒருக்கா உவர் வேலனைச் சாத்திரியாரிட்டை மைபோட்டுப் பாரன் பிள்ளை, கார்த்திகை முடிஞ்சு மார்கழியும் வரப்போகுது. இரண்டுவருசமாகுது. உயிரோடை இருக்கிறான் பாவியோ இல்லையோ எண்டாவது தெரியுமல்லோ.

எத்தினை நாளுக்குத்தான் நெத்தியிலே பொட்டை வச்சுக்கொண்டு திரியப் போறாய், சனமல்லே கதைக்குது மேனை"

அவளுக்குள் பொங்கிப் போன வார்த்தைகள் வெளிவரத்துடித்தன. தொண்டைக் குழிக்குள் அடங்குமாப்போல அது நின்றுகொண்டது.

"செல்லம் வாழ்க்கையிலை சாவு எப்பவும் மனிசருக்கு வரும் ஒண்டில் நான்முந்திப் போனா நீ எப்பவுமே இப்படியே இருக்க வேணும்"

ஒருமுறை அவள் கோபத்தோடு பார்க்க தயங்கித்தயங்கி அவன் கணவன் சொன்னான்.

அதை இந்தக்கிழவியிடம் சொல்லிக் கொண்டிருக்க அவளுக்குப் பொறுமையில்லை. மனிசி கேட்கவும் மாட்டுது.

அம்மாவிடம் வெறுமை கலந்த பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டுத் தேய்ந்தது.

'வேண்டாம் செல்லாச்சியக்கை, எனக்கேதோ அவர் இருக்கிறமாதிரி மனதுக்குப் படுது. அந்த மனிசன் ஒரு பூச்சிபுழுவுக்கும் கெடுதல் செய்யாது, ஒருதரோடையும் சோலிக்குப் போகாது. அவருக்கு ஒண்டும் நடக்காது ஆண்டவன் கைவிட மாட்டான்"

அவளுக்கு எவ்வளவு நம்பிக்கை. அவனோடை வாழ்ந்த நான்கு வருட வாழ்க்கையில் அவளுக்கு இரண்டு குழந்தைகள்.

கடைசிப்பிள்ளை நடக்கத் தொடங்கி ஆடி ஓடி விளையாடி அம்மா அப்பா சொல்லி எழுதிப்படிக்கும் போதெல்லாம் அவனுக்கு அப்பாவைத் தெரியாது, அம்மாவை, அப்பா எப்ப வருவார் எனக் கேட்டுக்கொண்டு நச்சரிப்பது அவனுக்கு வழக்கமானதொன்றாகப் போய்விட்டது.

மூத்தபிள்ளைக்கு விவரம் தெரியாத வயதில் அம்மாவின் கணவன் கடலோடு பேனவன், போனவன்தான். திரும்பிவரவில்லை. அவளுடைய மகிழ்ச்சிகளையெல்லாம் பறித்தெடுத்துக் கொண்டு போனான்.

எவ்வளவு இனிமையான வாழ்க்கை அவள் வாழ்ந்தது.

ஒருநாள் இரவோடு இரவாக அவள் குழந்தையைக் கையிற்பிடித்தபடியும் கணவன் கையில் அகப்பட்டதையெல்லாம் எடுத்துக்கொண்டும் கால்கள் சேற்றில் புதைய ஓடிவந்தனர். அந்த வீட்டைப் பிரிய அவளுக்கு மனமில்லை. அது அவள் கணவன் வியர்வை வழியக் கட்டிய வீடு.

"இனியென்ன அழாதையப்பா, ஊரோடை ஒத்தது தானே. எங்களுக்கெண்டு விடிவு வராமலே போகப் போகுது."

திரும்பவும் வருவம் உழைச்சுக் கட்டுவம்.

அவள் கணவனை நம்பிக் கையோடு பெருமை பொங்கப் பார்த்தாள். உறவுகளை விட்டு அவனுடையே வந்தவள் அவள், இரு குடும்பங்களும் விரும்பாத கலியாணம் அது. அப்படியிருந்தும் அன்றொல்லம் அவளுக்கு வசந்தங்களே வாழ்வின் சொந்தமாக இருந்தது. சின்னக்குருவிக்கூடு போல அவர்களது வீடும் குடும்பமும் கலகலத்தபடி எப்படிக் கலைந்துபோனது,

அன்று ஒரு மாரிகாலப் பொழுது, இருண்டுபோன வானத்தில் ஒற்றை ஒற்றையாய்ப் பறக்கும் காகங்கள் மற்றும்படி கடல் எப்போதும் போல அமைதிவாகத் தான் இருந்தது. எதுவித பரபரப்புமின்றி அவள் கணவன் கடலுக்கு வெளிக்கிட்டான்.

"ஏன் அவள் அன்று மாத்திரம் என்றுமில்லாதமாதிரி அப்படிச் சொன்னாளோ" தன்னைத்தானே நொந்து கொண்டாள்.

இண்டைக்கு கடலுக்கை இறங்காதையுங்கோ.

அன்றும்கடலிலிருந்து அவன் கொண்டுவரும் மீனை நம்பித் தான் வாழ்க்கைச்சீவியம் காத்திருந்தது. ஆனாலும் ஏனோ அவளுக்கு அப்படிச் சொல்லத் தோன்றியது.

'என்ன திடீரென்று உனக்கு வந்திட்டுது' என்னுமாப்போல அவன் மனைவியைப் பார்த்தான்.

"இண்டைக்கு நான் கடலிலை இறங்காட்டி கடையிலை கடனுக்குத்தான் சாமான் வேண்டவரும். கடன் வேண்டாம். நாங்கள் ஆருக்கும் கையேந்திப் பிழைக்கக் கூடாது.

அவன் போனான்.

போட்டுவாறன் என்று கூறி வள்ளத்தில் ஏறப்போனவன் திரும்பவும் வந்தான். கரையில் சிப்பிபொறுக்கியபடி நின்ற தன் மூத்தமகனைக் கட்டியணைத்தபடி மனைவியிடம் விடைபெற்றுப் போனான்.

அவள் புள்ளியாய் அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்தாள். காலை அவனுக்காக உணவு சமைத்தபடி காத்திருந்தாள். மதியமாகி பொழுதுபடுகிற நேரம் வந்து விளக்கேற்றி அவன் வரவேயில்லை.

"இராத்திரி அங்காலை கடலிலை ஒரே நேவி அடிச்சவனாம். இரண்டு போட்டைக் காணேலை"

சனங்கள் கவலைதோய்ந்த முகங்களோடு பேசிக்கொண்டனர். யார் யாரோவெல்லாம் அவள் வீட்டில் கூடினார்கள் தெரிந்தவாறெல்லாம் தேறுதல் சொன்னார்கள்

உவளின்ரை பலன் பிள்ளையைக் கொண்டுபோட்டுது. மாமி வாய் ஓயாமல் திட்டினாள்;

அவளின் கடைக்குட்டி பசியால் அழுதது.

அதுமுடிந்து இப்போது இரண்டு வருடங்கள்.

"உவன் ராசேந்திரத்தைப் பிடிச்சவங்கள் இரண்டுமாதத்திலை விட்டுட்டாங்கள். உது இரண்டு வரியமாச்சல்லே"

இப்போதெல்லாம் அவள் இறுகிப்போனாள். நாளும் பொழுதும் தும்படித்து கயிறு திரித்த கைகள் காய்த்து மரத்துப்போயின. வாழ்வில் வெறுமை, உயிரற்ற சிரிப்பு

அவளது கால்களை நுளம்பு பிய்த்தது. முகத்தில் மோதும் சேற்றுமணம் மூச்சு முட்டியது, அதை அருவருத்தபடி ஒதுக்க முடியாது. அந்தத் தொழில் அப்படி. ஊறப் போடும் மட்டைகள் நனையு மட்டும் மாதக்கணக்காகக் காத்திருந்து தானே அந்த சேற்றுக்குள் கிளறி எடுத்து அவள் மாடாய் உழைக்க வேண்டியிருந்தது.

அம்மாவின் மூத்த மகன் ஓடிவந்தான். அவன் இப்போது மூன்றாம் ஆண்டிற் படித்திக் கொண்டிருக்கிறான்.

'டேய் இந்தச் சேத்துக்குள்ளை வராதையடா கரையிலையே நில்லு"

ஏனம்மாநீங்கள் நிற்கிறியள் தானே ஒவ்வொரு நாளும் பாவம்அல்லே"

அவள் மகனை இரக்கத்தோடு பார்த்தாள். வயதுக்கு மீறிய வளர்ச்சியும் துடியாட்டமும் -- அம்மா அவனைப் பெருமை பொங்கப் பார்த்தாள்.

"நான் என்ரை குழந்தைகளை ஆளாக்க வேணும்" அது அவளின் கனவாக இருந்தது.

"அம்மா நாளைக்கு எங்கடை பள்ளிக்கூடத்திலை பெற்றோர் ஆசிரியர் தின விழாவாம் உங்கடை அம்மா, அப்பாவைக் கூட்டி வாருங்கோ," எண்டு ரீச்சர் எல்லாருக்கும் சொன்னவ'

"அதுதான் நீங்கள் வாங்கோ என்ன"

எங்க அம்மா வராமல் விட்டிடுவாவோ என்ற கவலை அவனது முகத்தில் தெரிந்தது

அவனது பிஞ்சு உள்ளத்தில் கவலை தெரியக்கூடாது. அம்மாவுக்கு குழந்தைகளே உயிராக இருந்தது. எல்லாப் பிள்ளைகளும் அம்மா அப்பாவைக் கூட்டிக்கொண்டு குதூகலித்தபடி வருவார்கள். தன்ரை பிள்ளை... அவளது கண்கள் கலங்கின. "என்ரை பிள்ளைக்கு அப்பா இல்லாத கவலை தெரியக்கூடாது"

எத்தினை மணிக்கு அப்பன் போறது"

காலமை ஒன்பது மணிக்கு வரச்சொன்னவை,

"சரி நான் வாறன் நீபோய் உடுப்புகளைக் கழட்டி கை கால் முகங் கழுவிப் போட்டுச் சாப்பிடு"

அம்மா கூற குதூகலத்தோடு சிட்டாகப் பறந்தான்.

"மெய்யே பிள்ளை போகப் போறியே"

செல்லாச்சிக்கிழவி வியப்போடு கேட்டாள்.

ஓமணை நான்தானே போக வேணும் இரண்டு வருசமாய் சனத்துக்குபயந்து வெளியிலை வெளிக்கிடாமல் இருந்தனான். மனிசனைச் சாகக் குடுத்துட்டு வெளியிலதிரியிறா எண்ட சொல்லுக்குப் பயந்து இருந்திட்டன்.

இப்பதான் தெரியுது அது பிழைஎண்டு

இரண்டு வருடத்துக்குபிறகு அவள் வெளியில் வெளிக்கிலடாள்."

"உதென்னமேனை நிறச் சீலையோடை போறாய். அதுதான் போக,

உந்தப் பொட்டையாவது அழியன்."

செல்லாச்சிக்கிழவி குறுக்கிட்டபடி வந்தாள்.

"உங்கபார், மனிசனை அங்கை கடலிலை நேவி சுட்டு இரண்டு வருசமாச்சு அவளின்ரை கோலத்தை"

மெல்ல யாரோ முணுமுணுப்பது அவளுக்கு தெளிவாகக் கேட்டது. ஆனால் அவள் அமைதியாக நடந்தாள். தன் மூத்த மகனின் கையினைப் பற்றியபடி வேகமாக — உள்ளத்தில் புதியதொரு நம்பிக்கை பிறந்தது போல கண்கள் பிரகாசித்தன

---

## சுதந் . . .

கொண்டிருந்தன`கால்களில் காட்டு முள் குத்தியது யாருக்குமே உறைக்கவில்லை. மேலதிக ரவைக் கூடு வைக்கும் அறையில் உதிரச்சேற்றை யாருமே அகற்றவில்லை. எங்கள் வீரர்கள் இறுதியாகப் பற்றியிருந்த ஆயுதத்தைத் துடைக்கும்போது கூட மனதிலிருந்து வேதனையை மட்டும் எம்மால் துடைத்தெறிய முடியவில்லை, ஆனையிறவுத் தளம்விட்டு திரும்பிக்கொண்டிருக்கையில் புயல் அடித்து ஓய்ந்தது போல அந்தப்பிரதேசம் காட்சி தந்தது.காயப்பட்ட தென்னைகளெல்லாம், 'எம்மைவிட்டுப் போகிறீர்களா?' என்று கேட்பதுபோல, .... அதன் கீழிருந்து உப்பளத்தில் ஏறிநின்று.

"'ஆனையிறவு மாங்காய் தின்ன வேண்டும்' என்று கூறிய எங்கள் இனிய தோழியர்கள் நின்று சிரிப்பதுபோல... —

எல்லாம் கனவுபோலக் கலைந்தபோது உப்பளத்து நீரைக் கண்கள் திரையிட்டிருக்கும். ஒருவரையறியாமல் ஒருவர் கண்களைத் துடைத்துக் கொண்டபோது எமக்குச் சிரிப்பூட்டிக் குறும்பு செய்ய மதனா எம்முடன் திரும்பி வரவேயில்லை'

கனத்த சுமையோடு தளத்துக்குத் திரும்பிக் கொண்ருடிக்கையிலும் எங்களுள்குள் நம்பிக்கை! அந்த ஆனையிறவும் ஒரு நாள் அடிபணியும். மதனாவின் முகம் நினைவில் மோதும்போதெல்லாம் 'ஆனையிறவிலும் புலிக் கொடி பறக்கும் எதிர்ச் சேனைகள் யாவிலும் உயிர் துடிக்கும்' என்ற களத்தில் நின்ற வேங்கைகளின் பாடல்வரி எம் காதுகளில் நிரம்பிக்கொள்ளும்.

---

உலகிலேலேயே மிகவும் அதிகமான பெண்கள் வேலை பார்ப்பது அமெரிக்க விமானப் படையிற்தான். பத்தாயிரத்து ஐம்பது வீராங்கனைகள் விமானப்படையில் கடமையாற்றுகின்றனர். முக்கியமாக சண்டைப்பயிற்சி, விமானம் மற்றும் போர் விமானங்களை ஓட்டும் விமானிகளாக இருநூற்றுத்தொண்ணூற்றைந்து பெண்களும் விமானப்படை உயரதிகாரிகளாக பதினான்கு சதவீதமான பெண்களும் உள்ளனர்.

கப்பற் படையில் நூற்றிப்பதினைந்து போர்க்கப்பல் ஓட்டுவதும் பெண்கள் ஆவர்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

# சுதந்திரத்தைத்தேடி



''கீழே விழுந்துபடன் மேலே இருந்து போடு றானல்வே''

''மென்டல் நீ சும்மாயிரு அவன் கிடந்தான்''

ஒரு முரட்டுப்பிடிவாதத்தோடு தென்னை மரத்துக்குப் பக்கத்தில் நட்ட பனைபோல அவள் நின்று கொண்டிருந்தாள். மற்றவர்கள் எல்லோரும் கீழே விழுந்து படுத்தாகி விட்டது. மேலே இருந்து சகடை வாகனத்தார் பீப்பாய்க் குண்டுகளை எங்களுக்கருகில் உருட்டி விட்டுக்கொண்டிருந்தார்.

''அது விசர். விழுந்து படுக்கா''

இன்னொருத்தி மதனாவைப்பர்த்து முணு முணுத்துக் கொண்டிருந்தாள்.

காற்று நெருப்பள்ளிக் கொட்டிக்கொண்டிருந்தது. எங்கள் மனத்திலும்தான். ஆனையிறவில் சண்டை தொடங்கி எட்டு நாட்களுக்கு மேலாகி விட்டது. இப்போது சண்டை நடப்பது வேறு இடத்தில். எங்கள் போராளிகள் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையத்தொடங்கினர். குண்டுவீச்சு விமானம், உலங்கு வானூர்தி, எறிகணை என்று மாறி மாறிக் குண்டுகளை தள்ளிக் குவித்தபிறகு எதையுமே மதனாவால் சட்டை செய்யமுடியவில்லை.

''பொறு வெட்டேக்குள்ள போய் நின்று சாகப்போறியே? நேரம் வரப் போகலாம் தானே''.

பொறுப்பாளர் என்னதான் சொன்னாலும் அவளால் இருப்புக்கொள்ள முடியவில்லை. பிரதான முகாமுக்குள் இறங்கும்போது விநியோகக்குழுவுடன் சென்று காயமடைந்த, வீரச்சாவடைந்த போராளிகளைத்தூக்கி அவளது கைகளில் மட்டுமல்ல, மனதிலும் பாரம் தேங்கிக் கிடந்தது. அதனால் தான் மற்றப் பக்கத்தில் சண்டைக்கான விநியோகத்திற்காகத் தரித்திருந்த போதில் அவளால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

''வேளைக்கு அனுப்பி ரெயினிங் எடுத்திருந்தாலும் அடிபட்டிருக்கலாம்''

இந்த ஆதங்கம், வேறு விசேட பயிற்சிப்பிரிவில் பயிற்சி பெற்றுக்கொண்டிருந்து விட்டுச் சண்டைக்காக இறுதி நேரம் அனுப்பப்பட்டவர்களில் இவளும் ஒருத்தி. அதனால் களத்தில் இறங்கிச் சண்டை செய்யும் குழுவுக்கு தெரிந்தெடுக்க முடியவில்லை. விநியோக வேலையே வழங்கப்பட்டிருந்தது. ஆனால் தனக்குத் தரப்பட்ட பணியை ஒழுங்காக நிறைவேற்றும் பழக்கம் அவளிடம் நிறையவே இருந்தது. மற்றவர்களை அனுப்பாமலிருக்க, தனக்கும் இன்னும் சிலருக்கும் சண்டைக்கான சந்தர்ப்பம் கிடைத்ததென்று சந்தோசத்தோடு துள்ளிக் குதித்தாள்.

அன்று பேருந்தில் ஏறும்போது எல்லாரது கண்களும் இவர்களையே பார்த்துக்கொண்டிருந்தன. அவர்களின் விரிந்த கண்களூடே, 'இவர்கள் சண்டைக்குப் போகிறார்கள்' என்ற பொறாமை, 'எவர் திரும்பி வருவாரோ' என்ற சந்தேகம், நம்பிக்கை எல்லாமே கலந்திருந்தது. பேருந்து புறப்படும்போது அந்தத் தளத்தை ஒரு கலக்குக்கலக்கிய மதனாவின் பிரிவு உள்ளேயொரு சுமையாய் இறங்கிக் கொண்டது.

''மதன் அண்ணா''

இது அவர்கள் மதனாவுக்கிட்ட புதிய பெயர். உருண்டு திரண்டு இருந்த அவளது கரங்கள் ஒரு முறை யாரிலாவது பதிந்துவிட்டால், மூன்று நாள் வரையும் வலிக்கும், காலால் மிதித்தால் கடுக்கும். துரத்திப் பிடிக்க ஓடி வந்தால் எல்லோரும் ஒட்டம் பிடிப்பார்கள்

''மூதேசி அடிச்சுப்போட்டுது''

அவளுக்குத் திருப்பி அடிக்க முடியாமல் ஒருத்தி முணுமுணுத்துக் கொண்டிருப்பாள். குழப்படி செய்ய வேண்டியிருந்தால் அவளைக்கேட்டுத்தான். காலை மடக்கி நிமிர்ந்து வரும்போது பார்க்க இயமனைப்போல இருக்கும். சமையலறையிலிருந்து கிணற்றடிவரை அவளது குறும்புகள், குழப்படிகள் நிறைந்து போயிருக்கும்.

மட்டுவில்! இது இந்திய இராணுவமும் புலிகளும் ஒளித்துப் பிடித்து விளையாடிய இடம். அவர்கள் ஒரு வீதியால் சென்று கொண்டிருக்க பக்கத்து வீதியால் எம்மவர்கள் சென்றுகொண்டிருப்பார்கள். எப்படித்தான் சுற்றிவளைத்தபோதும் இராணுவத்தின் வாடையே தெரியாமல் இருந்த பல பகுதிகள் புலிகளைக் காப்பாற்றிய சந்தர்ப்பங்கள் ஏராளம். மதனாவின் பிஞ்சுப் பாதம் பதிந்தது இந்த மட்டுவில் பகுதியில் உள்ள கைதடி நுணாவில் பிரதேசத்தில் தான். தளையசிங்கம் தம்பதிகளுக்குச் சிவமலர் என்ற பெயருடன் வளர்ந்த அந்தப்பிள்ளை பிரியமானதாகவும், பிடிவாதமானதாகவும்மே இருந்தது.


அண்மித்த நாவற்குழியில் இலங்கை இராணுவம். அதன்பின் இந்தியர்களின் வெறியாட்டம், சுற்றிவளைப்பு என்று மாறிமாறி இன்னல்கள் வந்து கொண்டிருந்த நுணாவில் பகுதியில் இந்திய இராணுவத்தின் கவசவாகனங்கள் அடிக்கடி அடிவாங்குவதுண்டு. அதனால் அக்கிராமம் சுற்றிவளைப்புக்கு பெயர் வாங்கியிருந்தது. இந்த நேரத்தில் சலசலப்பின்றி தமது வாசல்களைத் திறந்து போராளிகளை வரவேற்ற வீடுகளில் இவளின் வீடும் ஒன்றாகிப் போனது. தமிழர்கள் மீதான தொடர்ச்சியான அடக்குமுறை புதிய வேகத்தை உருவாக்கி முளைவிட்டு பலர் தேசத்திற்காகத் தம்மை உருமாற்றிக்கொள்ள வழி சமைத்துவைத்தது. மதனாவிடம் ஆழப் பதிந்துபோன அந்த விடுதலை உணர்வு வீட்டிலிருந்து புறப்பட்டு எப்படியாவது புலிகளின் பாசறையைச் சென்றுவிட வேண்டும் என்ற நிலை வரை வளர்ந்தது. அவளது கனவு கைகூடக் கனகாலம் காத்திருக்கவேண்டியும் ஏற்பட்டது. இந்தியன் இங்கிருந்து தொலைந்தபின், தலைமறைவாகியிருந்த புலிகள் மீண்டும் தலைநிமிர்ந்தபோது காட்டிலிருந்து வந்த பெண் புலிகளின் பாசறைக்கு ஓடி வந்து சேர்ந்தேவிட்டாள். இது நடந்தது 1990 இன் நடுப்பகுதியில்.

அந்தப்பயிற்சிப் பாசறை இவளும் ஒரு புலியாக உருமாற களம் அமைத்துக்கொடுத்தது.

''எங்களுக்கு ரெயினிங்தொடங்கக் கனகாலம் செல்லுமே?. எப்ப தொடங்கும்?.

அடிக்கடி அந்த முகாம் பொறுப்பாளருக்கு ஆக்கினையாக இருக்கும். முதல் தொடங்கிய ஒரு பகுதியினருக்கு பயிற்சி முடியும் வரை. ஏறத்தாழ இரண்டு மாதகாலமாக மற்றவர்களோடு சேர்ந்து சமையல்வேலைகளில் இவளும் ஈடுபட்டுக்கொண்டிருந்தாள். அவர்கள் பயிற்சி எடுப்பதைப் பார்த்துப் பார்த்து எப்படிப்பயிற்சியைத் திறமையாகத்

## இரண்டாம் லெப். மதனா



சிவமலர் தளையசிங்கம்

நுணாவில் கைதடி

பிறப்பு: 1972-02-05 வீரச்சாவு: 1991-07-27

தான் எடுக்க வேண்டும் என்று மனதில் ஒரு படத்தையும் வரைந்திருந்தாள். மகளிர் படையணியின் பதினோராவது பயிற்சிப் பாசறைக் காலமனது முழுமையாக இவள் தனது திறமையை வெளிக்காட்டிய காலம்.

''லாஸ்ற் றன்''

ஃபாஸ்ற் கூறுவதற்கு முன்பே தயாராகி ஓடியதும் இடித்துப் பிடித்து முன்னுக்கு ஓடிவந்து உற்சாகத்துடன் துள்ளி......

அது பயிற்சி முடிவதற்கான காலப்பகுதி. அன்று இரவு ரோந்து பற்றிய பயிற்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. குழுக்கள் இருளோடு இருளாக நிசப்தமாக முன்னேறிக்கொண்டிருந்தன. எந்தப் போராளியையும் தவறவிடக்கூடாது என்கின்ற உத்வேகம் எல்லார்மனதிலும் நிரம்பியிருந்தது.

ஆனாலும் என்ன இவளது குழுத்தலைவியை அவர்கள் மடக்கிப்பிடித்து விட்டார்களே!

மைதான நேரம் முடியுமட்டும்.

''லீடரைக் காப்பாற்றாமல் கிரவுண்டுக்கு வரமாட்டேன்'' மைதான நேரம் முடியுமட்டும் அந்த முரட்டுப்பாதங்கள் பிடிவாதமாக நின்றன. அந்த உறுதியான பிடிவாதம் களத்திலும் இறுதிவரை நிறைந்திருந்தது.

பலாலி மண் அவள் பாசறைப் படியை விட்டு வெளியேறிப் பகைதேட ஆவலாய் இருந்தபோது கிடைத்த ஒரு நல்ல வாய்ப்பு, எந்த இராணுவத்தினரைப் பார்த்து முன்பெல்லாம் அஞ்சி நடுங்க வேண்டியிருந்ததோ. அதே இராணுவத்துக்கு முன்னால் நூறு யாருக்குள் நின்றுகொண்டு அட்டகாசம் செய்யும் துணிவு எல்லாருக்கும் நிறைய' இருந்தது. செம்பாட்டு மண்ணுக்குள் கால் புதையப் புதைய நடந்து இரவுவேளை காவல் நேரத்தில், 'இராணுவம் வருகிறதோ' எனக்கூர்ந்து பார்த்து, எல்லாரையும் எழுப்பி இரவிரவாக நிலைகளில் இருந்துவிட்டு, விடிந்தபின் அது ஆடு தான் என்று தெரிந்த பிறகு சிரிசிரியென்று சிரித்து,

ஒருவரையொருவர் கேலி செய்து .. மறக்க முடியாத அந்தப் பலாலி வாழ்க்கை. அங்கு மண்ணோடு மண்ணாகிச் சிவப்பாகிப்போன தோழிகளின் நினைவோடு மீண்டும் களம் சென்ற வேளைகள், இறுக்கமான அந்த வாழ்க்கையில் மதனாவும் ஒருத்தி.

பின் காரைநகருக்குச் சென்றபோது பகிடி குறைந்தபாடில்லை. எதிரிக்கு அண்மித்த மரத்தில் ஏறி நின்றுகொண்டு இராணுவத்தினரைப் பார்த்துக் கீழேயிருப்பவர்களுக்கு வியாக்கியானங்கள் கூற அவர்கள் விழுந்து விழுந்து சிரிப்பார்கள்.

சிலாவத்துறைக்கு சிரிப்போடுதான் சென்றாள். வித்தியாசமான களமாக அமைந்த அந்தத் தாக்குதல் வேளையில் இவளின் கரங்களும் உறுதியோடு இணைந்து கொண்டன. இடையில் சிறப்புப் பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்பட்டவர்களுள் இவளும் ஒருத்தி. அங்கிருந்து மணலாற்றுக் காடு நாயாறு, அலம்பில் என்று சென்ற இடமெல்லாம் ஒரு சுற்றுலா மாதிரியே இருந்தது. இறுதியாக ஆனையிறவுக்குள் இறங்கிக் கட்டைக்காட்டுப்பக்கமாகச் சென்ற அணியிலும் மதனா .....

இயந்திரக் கழுகுகளுக்கு இரையாகிப்போன பனைகள், எம்மைக்காத்து நின்ற பற்றைகள், தீப்பற்றிக்கொள்ளும்போது இவளது கண்களுக்குள்ளும் ஒரு சுவாலை. அங்கு உருமறைந்தபடி நிமிர்ந்து நிற்கும் பசீலனின் பரல்கள் போல எமது நம்பிக்கையும் நிமிர்ந்தே நின்றது.

''நான் டோபிடோதான் கொண்டு போவன்''

அவள் அதை அடிக்கடி கூறிக்கொண்டிருந்தாள். எங்களுக்கு டோபிடோவைப் பற்றி நன்றாகத் தெரியும். எம்மவர்களின் இடைவெளி எம்மில் வேகம் ஊட்டிக்கொண்டிருந்தது.

பதிந்து குத்திய விமானத்திற்கு எதிராக பெரிய துவக்குகள் ஒருமுறை சடசடத்து அடங்கும் வானத்தில் புள்ளியாக எங்கோ மறைந்து ஓடும்போது போட்டுவிட்டுப்போன குண்டு விழுந்து குழிகளைக் கிண்டியிருக்கும். வெட்டைப்பக்கமாக நகர்ந்து சென்று விநியோக வேலைகளை முடித்து விட்டுத் தோப்புக்குத் திரும்பிய அடுத்த குழு நகரும்போது பார்த்தால் ஆட்கள் பற்றாக்குறை. மீண்டும் செல்கின்ற அணியோடு சேர்ந்துகொண்டு போனபோது மதனா சலிப்படையவில்லை.

''இறங்கி அடிபட வேணும்"

என்றுதான் கூறிக்கொண்டிருந்தாள். கையிரண்டும் ரத்தம் தோய்ந்து உடையெல்லாம் அழுக்குப் படிந்து முட்களால் கீறப்பட்டுக் கிழிந்த போதும் வழமைபோல அவள் விநியோகத்துக்குச் செல்லத் தயாராகி நிற்பாள்.

நேரம் நெருங்கிக்கொண்டிருந்தது. ஆனையிறவுத் தளம்மீதான இரண்டாவதும் இறுதியானதுமான தாக்குதல் அணிகள் சீரமைக்கடபட்டு மதனாவின் தலைமையிலும் ஒரு குழு. ''இறங்குகிற குழு' என்ற சந்தோசத்தோடு எல்லோரும் சேர்ந்து கொண்ட இந்த வேளையில் தான் தெரிந்தது, பேருந்தில் ஏறும்போது விடைகொடுத்துக் கண் கலங்கியவர்கள் சிலர் நிரந்தரமாகவே எம்மிடமிருந்து பிரிந்த செய்தி அதில்ஒருவராக இவளது களத்திற்கு வந்த பயிற்சியாசிரியரும் சேர்ந்து

## உதயலட்சுமி

கொண்டதை மதனாவால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. 'திலகாக்கா' பயிற்சி பாசறைக்கு மனம் ஒருமுறை சென்று திரும்பும். நினைவுகள் கனக்கும்.

என்றாலும் மதனாவின் குறும்புகள் இறுதி வரை இறக்கவில்லை. இளநீர் பிடுங்கிக் குடித்து, எல்லோரும் கோம்பைக்கு அடிபட்டு. இருபத்தேழாம் திகதி தயாராகி நின்றபோது அவளது கையில் டோபிடோ இல்லை. குழுத்தலைவியாக ஆயுதம் தரித்திருந்தாள், எல்லோர் முகத்திலும் உற்சாகம். புதிய வேகம். அந்த அணி எதிரியின் தளத்தை நோக்கி நடக்கத் தொடங்கியிருந்தது.

வைத்தியசாலைக் கட்டிலில் விழுப்புண்களோடு கிடந்தவர்கள் அடிக்கடி பத்திரிகையும் களத்திலிருந்து வருபவர்களையும் பற்றிய செய்தியறியக் காத்துக்கொண்டிருந்த வேளை களத்திற்குச் சென்ற அணிகள் இடைவெளிகளோடு திரும்பிக்

(4ஆம் பக்கம் பார்க்க)

# நெஞ்சம் சுமக்

எங்கள் தலைவனால் புடம் போடப்பட்டு, உறுதியான இலட்சியக்கொள்கையுடன் வளர்த்தெடுக்கப்பட்ட எங்கள் கண்களில் ஈரமில்லை. நெஞ்சில் பாரமில்லை. ஆனால் எங்களுடன் பழகிய தோழிகள், தோழர்களின் நினைவுகளை, அவர்களின் உன்னதமான செயல்களை ஒவ்வொரு சமயங்களில் அவர்கள் சொன்ன அந்த உணர்ச்சி மிகுந்த உள்ளார்த வார்த்தைகளை மீண்டும் மீண்டும் எண்ணத்தோன்றும் அவர்களின் கடைசிச் சொற்களை எங்களால் புரிந்துகொள்ள முடிந்த தன் விளைவாக, மனதில் பதிந்த சில நினைவுகளை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன்.

இவர்களை நினைக்கும் போதுமட்டும் ஏனோ தெரியவில்லை. எம் கண்களில் ஈரம். நெஞ்சில் பாரம்.

மகிந்தா

## விசுவாசக்காய்

ஆனையிறவு வரலாற்றுச் சமரிலே இயக்கச்சிப் பக்கமாக நடந்த சண்டையொன்றில்' அன்று லீமா இருகுழுக்களுக்குப் பொறுப்பாக விடப்பட்டிருந்தாள் சண்டை நடந்துகொண்டிருந்தபோது எதிரியின் எறிகணைத் தாக்குதலால் கையில் காயமடைந்தாள். இரத்தம் பீறிட்டு வழிந்து கொண்டிருந்தபோதும் தொடர்ந்து சண்டை பிடித்துக் கொண்டிருந்தாள். காயத்தைக் கவனித்த சக தோழிகள் அவளைப் பலவந்தமாகப் பின்னுக்கு அனுப்பிவைத்தனர்.

சண்டை தொடர்ந்து கொண்டிருந்தது. தமக்கு மிக அண்மையில் மீண்டும் லீமாவின் குரல் கேட்டுத்திகைத்துக் போயினர் தோழிகள். கையில் கட்டும், மறுகையில் ரீ 81, முதுகிலே அருள் எறிகணைகள். மருத்துவக்கொட்டிலில் ஓய்வாக இருக்கவேண்டியவள் களத்தில் நின்றாள்.

''மெடிக்சிலை நில்லுங்கோவன். ஏன் இஞ்ச வந்தனிங்கள்?'' என்ற தோழிகளிடம்,

''வீணாக் கதைக்காமல் என்னைச் சண்டை பிடிக்க விடுங்கோ. நாங்கள் எப்படியும் இண்டைக்கே இந்தப் பக்கத்தைப் பிடிக்கவேணும்''

என்றவளிடம், யாராலுமே பின்னே போகுமாறு சொல்ல முடியாமல் போனது. எல்லோரும் சண்டையிலேயே கவனமாக இருந்தனர்.

எதிரியின் நிலையச் சுற்றி பலமான அரண்கள், அரண்களைச் சுற்றி நெருக்கமாக முட்கம்பி வேலிகள், வேலிக்கு மிக நெருக்கமாக எம்மவர்கள். நாங்கள் முட்கம்பி வேலிகளை நீக்கியவாறு உள்ளே நுழையப்பலத்த முயற்சி செய்துகொண்டிருந்தோம். லீமா இராணுவத்தினரின் நிலையை அடைவதற்காக வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தாள். எதிரியின் ரவையொன்று அவளின் மார்பிலே காயத்தை ஏற்படுத்தியது.

'அம்மா' என்ற முனகலுடன் ரீ 81 ஐ அணைத்தபடி லீமா அந்த உப்பள மணலில் ...... எப்படியாவது இன்று அந்த இடத்தைக் கைப்பற்றி விடவேண்டும் என்ற வேகத்துடன் முன்னே போன லீமா எதிரிக்கு மிக அருகே கிடந்தாள். எதிரியின் எல்லைக்குள் எங்கள் தோழியின் உடல். அவளின் உடலை மீட்பதற்குச் செய்த முயற்சிகளெல்லாம், சண்டையின் போக்குத் திடீரெனத் திசை திரும்பியதால் சாத்தியப்படாமற் போயிற்று.



எங்கள் லீமா'

உறுதியின் பிறப்பிடம். அவளிடமிருந்து நாம் எத்தனையோ கற்கவேண்டியிருந்தன. எந்த நேரமும் மேலதிக ரவைக் கூட்டு அணி கட்டி, அருள் எறிகணை அணியைப் பின்புறம் கட்டி, தன் ரீ 81 உடன் அவளுக்கேயுரிய நிமிர்ந்த நடையுடன் அவள் திரிந்தபோதெல்லாம் நாங்கள் அடிக்கடி அவளிடம் சொல்லுவோம்.

''நீ விசுவாசக்காய். நித்திரையிலையும் கோல்சர் கழட்டமாட்டாய்''.

அப்பொழுதெல்லாம் அவள் அமைதியாகச் சிரிப்பாள்.

## இரகசியப்பறவை

அனித்தா வித்தியாசமானவள். வித்தியாசமான முறையில்தான் ஆடைகள் அணிவாள் கதைக்கும் பொழுது நெற்றியில் வந்துவிழும் மயிர்க்கற்றைகளை 'ஸ்ரைலாக' தூக்கிப் பின்னே தள்ளிவிடுவாள். ஏன் அவள் 'இப்படியெல்லாம்' இருக்கவேண்டியிருந்தது என்றால், அவள் செய்த வேலை 'அப்படி'.



1990 இன் நடுப்பகுதி. மட்டு- அம்பாறை மாவட்டத்தில் பெண் போராளிகள் சிறிய குழுவாக, மிக இரகசியமான முறையில் இயங்கிக் கொண்டிருந்த காலம். கருணா அம்மானின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் புலனாய்வு, மற்றும் வேறு நடவடிக்கைகளுக்கும் பயிற்றப்பட்டுச் செயற்பட்டுக் கொண்டிருந்தாள். தாம் ஆயுதப் பயிற்சி எடுக்கவில்லை என்று ஒரே குறை. ஆனாலும் கருணா அம்மான் சந்தர்ப்பம் கிடைக்கும் நேரங்களிலெல்லாம் சில மணித்தியாலங்களுக்குப் பயிற்சி கொடுத்து ஆயுதங்களை இயக்கப் பழக்கியிருந்தார். அனித்தாவும் இப்பயிற்சிகளைப்பெற்றுக் கொண்டாள்.

அனித்தா நான் படித்த பாடசாலையில் படித்தவள். என்பதால் ஏற்கவவே நட்பாகியிருந்தோம். இப்போது மேலும்நெருக்கமாகி விட்டிருந்தோம். இருவருமே இரகசிய வேலைகளில் ஈடுபட்டிருந்த தோம்பொதுஇடங்களில் கதைக்கமுடியாது எல்லாம் கடைக்கண் மொழியில்தான்' இரகசியமாகச் சந்திப்பு நிகழும்போதெல்லாம்.

''ஏனடி, எப்ப நாங்கள் சண்டைக்குப் போறது கேட்டுப்பாரன். யாழ்ப்பாணத்துக்குப் போவம்''.

என்பாள், எல்லோருடைய மனமும் இதே நிலையிலேயே இருந்ததால், ஒருவருடனும் ஒன்றும் பேச மாட்டோம்.

நாளடைவில் இவள் இரகசியச் செய்திகளுடன் நடமாடியிருக்கிறாள். மாட்டுப்படப் போகும் நிலைகளில் சாமர்த்தியமாகத் தப்பியிருக்கின்றாள். மட்டக்களப்புக்கும் அம்பாறைக்குமாக இவள் எத்தனையோ தடவைகள் தன் உயிரைப் பொருட்டாக மதிக்காமல் போய் வந்திருக்கின்றாள்.

அன்றும் அப்படித்தான், தான் தூர எங்கோ போவதாகவும், வர நாள் செல்லும் எனவும் சொல்லி விடைபெற்றவள்.

''கிட்டடியிலை சாவன் போல மனம் சொல்லுது, செத்தா என்னை மறக்க வேண்டாம். நல்லா வேலை செய்யுங்கோ''

என்று சொல்லிப்போனாள்.

கருணா அம்மானிடமிருந்து மேஜர் குலதீபனுக்கு சில இரகசியங்களைச் சுமந்து சென்றவளை களவாஞ்சிக் குடியில் இந்தியப்படைகளும் தேசவிரோதக் கும்பலான தமிழீழ விடுதலை இயக்கமும் சேர்ந்து வழிமறித்தபோது, சயனைட்டை உட்கொண்டு வீரச்சாவைத் தழுவிக்கொண்டாள். அவளை உயிருடன் பிடிக்க முடியாத ஆத்திரத்தில் அவளின் உடலை வீதியால் இழுத்துச் சென்று வீசிவிட்டுப் போயினர்.

மீன்பாடும் தேன் நாட்டின் முதல் பெண் மாவீரர் என்ற பெருமை அவளுக்குச் சேர 'இந்த மண்ணில் பெண்மை வீரம் படைக்கும்' என்ற புகழ் தமிழ் பெண்ணினத்திடம் வந்து சேர்ந்தது.

## ஒரு பிள்ளை

மணலாற்றுக் காட்டில் பயிற்சி நடந்துகொண்டிருந்தது கோமகளும் எம்மோடு பயிற்சி எடுத்தாள். அவள் எல்லாவற்றிலுமே நல்ல கெட்டிக்காரி.

திடீரென ஒருநாள் 'எச்சரிக்கை (Alert) தரப்பட்டது. அன்று எமக்கு ஓய்வு நாள் என்பதால் எல்லோரும் கூடிக் கும்மாளம் அடித்துக்கொண்டிருந்தோம். எங்கள் பயிற்சி ஆயுதங்களை வேறு வேறு திக்குகளில் கண்டபடி வைத்திருந்தோம், 'எச்சரிக்கை' தரப்பட்டவுடன் பயிற்சி ஆயுதத்தை எடுத்துக்கொண்டு எமக்கென ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் நிலை எடுத்தோம். பின்வாங்கி வருமாறு கட்டளை கிடைத்தபின் எல்லோரும் மைதானத்தில் போய் நின்றோம்.

அப்போதுதான், கோமகள் பயிற்சி ஆசிரியர்முன் நின்று அழுது கொண்டிருப்பதை கண்டோம். முதலில் எங்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை. பிறகுதான் தெரிய வந்தது, இவளுடைய பயிற்சி ஆயுதத்தை யாரோ மாறி எடுத்ததால் அழுகிறாள் என்று இதனால் இவளுக்குத் தண்டனை கிடைத்தது.

'வருக்கா' என பம்பலாகச் சொல்லப்படும் பெரிய மரக்குற்றியை இவளிடம் கொடுத்தார்கள் அது சரியான பாரம். சாதாரணப் பயிற்சி ஆயுதத்துடன் ஓடுவதேகடினம்.



கோமகள் 'வருக்கா' வை வைத்துக்கொண்டு அழுது கொண்டிருந்தாள். இதன் பின்னர் அவளை நாம் 'வருக்கா' கோமகள் என்றுதான் அழைப்போம்.

காலையில் ஓட்டப்பாதையில் நாம் சாதாரண ஆயுதத்துடன் ஓட, இவள் வருக்கா வுடன் ஓடுவாள். நாங்கள் எங்களிடம் மாறித் தந்து விட்டு ஓடும்படி கேட்டாலும் மறுத்துவிடுவாள். வருக்கா வுடன் இளைத்து இளைத்து

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# கும் நினைவுகள்

ஓடுவதைப் பார்க்கப் பாவமாக இருக்கும். சரியான விசுவாசம்.

பயிற்சி முடிந்து, நாமெல்லாம் நாட்டுக்கு வந்தபின்னர், 'கரும்புலியாக விரும்பிக் கேட்டு, அதற்குரிய கடும் பயிற்சியை எடுத்திருந்தாள் வீட்டிலே அவள் ஒரே ஒரு பிள்ளை என்பதால் அவளின் இந்த முடிவைப்பற்றி நாம் கேட்டபோதெல்லாம் சிரித்துக்கொண்டே சொல்வாள்'

''ஒரு பிள்ளை எண்ட.ா சா வராதோ? எப்படியென்டாலும் சாகத்தானே போறம். சாவுக்குப் பயந்து எங்கையும் ஓடேலாது".

இவளின் அம்மா இவளைச் சந்திக்கவென வருகின்றபோதெல்லாம்,

''நீ வராதையணை. நான் வேறை இடத்துக்குப் போறன் நான் போனாலும் இவங்களை வந்து பாருங்கோ''

என்பாள். அதன்பின் நாம் வெவ்வேறு திசைகளில் பிரிந்து போனோம்.

மாங்குளம் சண்டைக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களில் இவளும் ஒருத்தி. இவள் ஒரு குழுவுக்குத் தலைவியாகச் சென்றாள். அந்தச் சண்டையில் அவள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டாள்.

கரும்புலியாகத் தான் சாக வேண்டும் என்று விரும்பியவளுக்கு அதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. கரும்புலியாக வேண்டும் என்ற விருப்பில் உறுதியாக நின்றதும், பயிற்சியின் போது 'வருக்கா' வுடன் திரிந்ததும் இன்றும் நினைவில் பசுமையாக இருக்கின்றது. இவளின் விசுவாசத்தை, உறுதியை நாம் எங்கள் உணர்வுகளுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

## நினைவின் சிகரம்

அன்றிரவு, பலாலி கிழக்கெல்லையிலுள்ள (தொண்டைமானாற்றுக் கரையிலிருந்து ஒட்டகப்புலம்வரை) காவலரண்களை அழிக்க வேண்டும் தயாரிக்கப்பட்ட திட்டத்தின்படி நாங்கள் இருளில் நகர்ந்து கொண்டிருந்தோம். நிலம் சேறாக இருந்ததால், எமது பாதணிகள் எம்மை இடையிடையே வழுக்கிவிழவைத்தன. மூச்சைத்தவிர வேறு ஒலியே எழும்பவில்லை. வேவுப் போராளியின் பின்னே ஒவ்வொரு குழுக்களாக நகர்ந்தோம்.

எதிரியின் காவலரணுக்கு மிக அண்மையிலுள்ள, நான்காவது முள்வேலிக்கருகே நாம் நிலையெடுத்திருந்தோம். தாக்குதல் கட்டளையை எதிர்பார்த்து அசைவற்றுக் காத்திருந்தோம். நுளம்புகள் எம்மை நிலைகுலையச் செய்யமுயன்று தோற்றுக் கொண்டிருந்தன. எங்களின் ஒரு சிறு பலவீனமும் பெரிய உயிர்ச் சேதத்தை உண்டு பண்ணும் என்பதால், தும்மலையும் கட்டுப்படுத்தினோம். எல்லோர் விழிகளிலும் கூர்மைதான் தேங்கிக் கிடந்தது.

எதிரி எமக்கு சில மீற்றர்கள் இடைவெளியில் இருந்து கொண்டு அடிக்கும் தேடொளி கண்களைக் கூசச் செய்தது. எல்லோருமேஆடாமல், அசையாமல், 'எங்களை அவன் கண்டிருப்பானோ' என்ற ஐயத்துடன், ஆயுதங்களைத் தயார் நிலையில்வைத்தவாறு ......

திடீரென எதிரியின் துப்பாக்கி சடசடத்தது. எங்களைக் கண்டு அடித்தானோ அல்லது கனவு கண்டு அடித்தானோ, யாருக்குத் தெரியும்? டொங்கான்ர எறிகணை ஒன்று நிலை எடுத்து நின்ற ஜமீலாவின் இடது காலைத் துண்டித்தது. வலது கால்தசை அள்ளுண்டு போனது. உடல் முழுவதும் எரிகாயங்கள்.

எதிரியைத் தாக்கி அழிப்பதற்காக எதிரியின் எல்லைக்குள் நாம், அந்த நேரத்தில் இப்படியொரு சம்பவம்! ஜமிலா அழவில்லை, முனகவில்லை அமைதியாக இருந்தாள். தாக்குதல் திட்டம் தன்னால் பின்னடையக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தாள். எரிகாயங்கள் உச்ச வேதனையைத் தந்த போதும் ஒரு முனகல், முணுமுணுப்பு இல்லாமல், அந்த முள் வேலிக்கு அருகே, தன் வேதனையை விழுங்கியவாறு படுத்திருந்தாள். துண்டிக்கப்பட்ட காலிலிருந்து ஓடிய குருதியும், அவள் உள்ளத்து உறுதியும், மண்ணுக்குக் காணிக்கையாக்கப்பட்டன.



ஜமிலா காயப்பட்டு ஏறத்தாழ ஒரு மணித்தியாலத்தின் பின் தான் நாம் தாக்குதலை ஆரம்பித்தோம், சண்டை தொடங்கியபின், காயப்பட்ட, போராளிகள் களத்திலிருந்து அப்புறப்படுத்தப் பட்டார்கள். அப்போதுதான் ஜமீலாவும் கொண்டு செல்லப் பட்டாள்.

வைத்தியசாலையில் அவளுக்குச் சிகிச்சை அளிக்கப் பட்டது. ஜமீலா ஒரு காலையும் இரண்டு கண்களையும் இழந்து விட்டிருந்தாள். வைத்திய சாலைக்குக் கொண்டு வரப்பட்ட ஒவ்வொரு காயமடைந்த போராளியையும் அவர்களின் குரலில் இனங்கண்டு கூப்பிட்டு, சண்டை நிலவரத்தை விசாரித்தாள்.

மறு நாள் வழமைபோலவே விடிந்தது. ஆனால், ஜமிலாவின் சாவுச் செய்தி எங்களை உலுப்பிவிட்டது.

நூற்றைம்பதுக்கும் மேற்பட்ட காவலரண்களை அழிப்பதில் கிடைத்த வெற்றிக்கு இவளின் ஈகமும் ஒரு காரணியாகியது. ஜமீலா எங்கள் நினைவு இதயத்தின் சிகரத்தில் ஏறி அமர்ந்து கொண்டாள்.

## என்னோடு கைவீசி வா

பொய்கை

காற்றே என்னோடு
கைவீசி நடந்துவா
நேற்றைய எனது
நினைவுகளின் கனத்திலே
நான் நிம்மதியாக உறங்கவில்லை.
முட்படுக்கையில்
மோதுகையில்
சிலவேளை
உனக்கு வலிக்கும்
நான் அதற்குள் தான்
வாழ்க்கை நடத்துகிறேன்
நிலவு மட்டும்
பார்வையால் என்னைப் பார்த்து
பரிதாபப்படுகிறது.
நான் என்னைப் பார்த்துப்
பாவப்படுவதற்காக
உன்னைக் கூட்டிவரவில்லை
எனது உணர்வுகளைப்
படித்துக் காட்டத்தான்

நேற்று வரையும்
எனது சிரிப்புக்கு.
காரணமாக விருந்த
எனது தோழியைக் காணவில்லை.
கேட்டபோது
உன்னுள் கலந்து விட்டதாகத்தான்
சொன்னார்கள்'
எப்படி எனது உரிமையை
நீ எடுத்துக் கொள்வாய்
உன்னைக் கிழித்தபடி

சிறிப்பாய்ந்து
எங்கோ சில உயிர்களைப்
பலியெடுத்த குண்டுகள் ..

அவற்றின் பிறப்பிடத்தை
அறிவதற்காக
நானிங்கு நடு இரவில்
விழித்திருக்கிறேன்.
நாளைய விடிகாலைப் பொழுதோடு

அவர்கள் முன்னேறலாம்
வாய்பிளந்த பீரங்கிகள்

இவ் விடத்தில் நிலைகொள்ள
முயற்சிக்கலாம்.
அதுவரை நான்
பொறுத்திருக்கப் போவதில்லையே!

என் துப்பாக்கிச் சத்தத்தோடு
இன்னும் சில துப்பாக்கிகள்
சிவந்து கொள்ளும்
நாளை இந்த முட்படுக்கை மீது
விழித்திருக்க நானில்லாம லிருக்கலாம்

இனனொருத்தி வருவாள்
அவளும் தனது
உணர்வுகளை உனக்குச்
சொல்வாள்.
எல்லாவற்றையும்
கேட்கிறாயே

எழுந்து வீசி
இதை எல்லோர்க்கும்
சொல்வாயா?

# வெளிச்சத்துக்கு வந்தவை

எண்பத்தினாலாம் ஆண்டிலிருந்து தொண்ணூற்று மூன்றாம் ஆண்டுவரை அவள் தன்னுள் அடக்கிவைத்திருந்த எரிமலை குமுறலாக வெளிப்பட்டது. இப்படியும் வாழ்க்கையில் துன்பங்கள் இருக்குமா? இந்தியப் பத்திரிகைகளில் வரும் பெண்கள் மீதான கொடுமைகள் போல எத்தனையோ சோகச்சம்பவங்கள் எமது கிராமத்தின் நாலுசுவர்களுக்குள் புதையுண்டு கிடக்கிறது. வெளியே சொல்லமுடியாத துயரம். யாரிடம் சொல்லி ஆறுதல் தேடுவது. ''உதென்ன பெரியவிசயமே வீட்டுக்கு வீடு வாசற்படிதானே'' என்று பிரச்சனைகளைக் கேட்டுவிட்டு புறக்கணித்துவிடுவார்களோ' என்ற ஆதங்கம். யார் நீதிகேட்பார்கள்' என்ற கவலை எத்தனையோ பெண்கள் மனங்களில் பாரம் சுமந்தபடி திரிகிறார்கள். வாழ்விலிருந்து எவ்வாறு மீள்வது. நீண்ட பெருமூச்சுக்களினைத் தாங்கியபடி இப்போதுதான் நீதிகேட்டு மெல்ல மெல்ல எழுகிறார்கள். பிரச்சனைகள் வெளிச்சத்துக்கு வருகின்றன.

இது தமிழீழ நீதிமன்றத்துக்கு வந்த விவாகரத்து வழக்கு, அவள் வாழ்வில் நிறையக் காயப்பட்டுப் போனாள். தனது துன்பங்களைத் தனக்குள்ளே புதைத்து உக்கிப் போனாள்.

இருபத்தினாலு வயதுக்குள் சுமக்கமுடியாத சோகங்களைத் தாங்கித்தாங்கி துவண்டுபோனாள். பதினாறு வயதிற் திருமணம் செய்து எல்லாம் முடிந்துபோன விரக்தி. வாழ்வின் வெறுமை.

அவள் காதலித்துச் செய்த திருமணம் அது. சாதி ஏற்றத்தாழ்வுகள் அந்தத் திருமணத்தைப் பொறுத்தவரை குறுக்கீடாக நின்றன. இதனால் பெண்ணின் பெற்றோர்கள் இத்திருமணத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். திருமணத்தையும் ஏற்றுக்கொள்ளவில்லை. அவளையும் ஏற்றுக்கொள்ளவில்லை.

'நீ எங்களுக்கு மகளுமில்லை நாங்கள் உனக்குப் பெற்றோரும் இல்லை' என்று கூறி உறவுகளை முறித்துக்கொண்டநிலை. பெற்றோர் கைகழுவி விட்ட நிலையிலும் அவள் தனது உறவுகளைத் துறந்து நிறைய எதிர்பார்ப்புக்களோடும் அசட்டுத்துணிச்சலோடும் அவனுடனேயே சென்றாள்.

## கொற்றவை

சிறிதுகாலம் செல்லச் செல்ல அவனது சுயரூபம் தெரியத் தொடங்கியது. குடும்பங்களிற்கிடையேயான பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், சாதி ஏற்றத்தாழ்வுகள் அவனிடையே தாழ்வுமனப்பான்மையை வளரச்செய்தது. அதுவே காலப்போக்கில், அவளைப் புறக்கணிக்க வைத்தது. கணவனால் நாளும் பொழுதும் மிகமோசமான வன்முறைக்கு உட்படுத்தப்பட்டாள். குடித்து விட்டு அவனது நண்பர்கள் எதிரிலேயே அவளை அவன் அடித்தும் வதைத்தும் வந்தான். ஒரு வீட்டுக்குள் அடைபட்ட கைதியைப்போல அவள் வாழ்ந்தாள். மனைவி என்ற நிலையில் மிக மோசமான பாலியல் வதைகளுக்கும் உட்பட்டாள். இப்போது மூன்று குழந்தைகளையும் கையிற்பிடித்தபடி விவாகரத்தே ஒரே தீர்வு என்ற நிலையில் உறுதியாக நின்கின்றாள்.

இவ்வாறு நிறையச் சம்பவங்கள் பெண்களின் ஆழமான மனத்தாக்கங்களையும், மோசமான குடும்பவன்முறைகளையும் தாங்கியதாக நிற்கின்றன. அடிப்படையில் பெண்ணை சாதாரண ஒரு மனித ஜீவியாகக் கூட மதிக்காது பின்தள்ளப்பட்ட சம்பவங்களை இவ்வழக்குகளிலும் குற்றவியற் பிரச்சனைகளிலும் காணக்கூடியதாக இருந்தது.

வீட்டுக்குள்ளே நடைபெறும் இப் பிரச்சனைகள் பெரும்பாலும் வெளியில் வருவதில்லை. ஆனால் அனேகமான குடும்பங்களிற் பெண்கள் இவ்வாறு பாதிக்கப்படுகிறார்கள்.

தமிழீழத்தின் நீதி நிர்வாக ஒழுங்கை மேற்கொள்ளும் முக்கிய நடவடிக்கையாகக் கட்டியெழுப்பப்பட்ட தமிழீழ காவற்துறையும், நீதிநிர்வாகத்துறையும் ஆரம்பித்ததன் விளைவாக மக்கள் தங்கள் பிரச்சனைகளுக்கு தீர்வு கோரி குரல் எழுப்புகின்றனர். இதில் பெண்களும் தமக்கெதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள ஒடுக்குமுறைகளுக்கும், வன்முறைகளுக்கும் எதிராகத் தீர்வு கோரி நிற்கின்றார்கள்.

இதனடிப்படையில் தமிழீழக் காவற்துறை ஆரம்பித்து இதுவரைகாலமும் கிடைக்கப் பெற்ற பெண்களுக்கெதிரான குற்றங்கள் பற்றிய விபரத்தினை இந்த அட்டவணைகள் காட்டுகின்றன. இந்த அட்டவணையிற் தரப்பட்ட விபரங்கள் யாழ்குடா நாட்டில் 1982, 1983 ஆகிய ஆண்டுகளில் கிடைக்கப் பெற்ற விபரங்களை உள்ளடக்கியது.

இக் குற்றங்கள் பெண்களுக்கெதிராக மேற்கொள்ளும் பாரிய குற்றவகைகளுக்குள் அடங்குகின்றன.

### 01-01-1992 முதல் 31-12-1992 வரை யாழ். குடா நாடு.

| இல. | பெண்களுக்கெதிரான குற்றங்கள் (பிரிவுகள்) | தை | மாசி | பங். | சித். | வைகா. | ஆனி | ஆடி | ஆவ. | புர. | ஐப். | கார். | மார். | மொத் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | திருமணம் செய்த பெண்ணைவிட்டு வேறு பெண்ணை மணத்தல் | 38 | 26 | 24 | 15 | 23 | 16 | 20 | 08 | 09 | 01 | 05 | 03 | 188 |
| 02 | பெண்ணை கொடுமைப்படுத்தல் | 09 | 04 | 03 | 02 | 05 | 07 | 05 | 02 | 02 | - | - | - | 39 |
| 03 | பெண்ணுடன் சேட்டை | 10 | 12 | 10 | 15 | 15 | 12 | 16 | 04 | 03 | 03 | 02 | - | 102 |
| 04 | பெண்ணை திருமணம் செய்வதாக ஏமாற்றி கர்ப்பம் தரிக்க வைத்துப் பின் திருமணம் செய்ய மறுத்தல் | 15 | 10 | 08 | 05 | 03 | 04 | 02 | - | 02 | 04 | 04 | 04 | 61 |
| 05 | பெண் கடத்தல் | 02 | 02 | 01 | 02 | - | - | - | - | - | - | - | - | 07 |
| 06 | திருமணம் செய்து பின் பெண்ணை விட்டுப் பிரிதல் | 10 | 04 | 08 | 09 | - | 02 | 04 | 08 | 02 | 01 | 01 | 03 | 52 |
| 07 | பெண்ணை அடித்து அவமானப்படுத்தல் | 30 | 25 | 25 | 28 | 36 | 40 | 17 | 38 | 34 | 42 | 30 | 56 | 401 |
| 08 | அவமானப்படுத்தல் | 20 | 21 | 25 | 14 | 24 | 34 | 33 | 24 | 07 | 31 | 26 | 30 | 289 |
| 09 | பெண்ணை அடித்து மானபங்கப்படுத்தல் | 06 | 02 | 05 | 03 | 01 | 01 | - | - | - | - | - | - | 18 |
| 10 | மானபங்கப்படுத்தல் | 04 | 04 | 02 | 05 | 04 | 06 | 02 | 03 | 01 | 01 | 02 | - | 34 |
| 11 | காதலித்த பெண்ணைவிட்டு வேறு திருமணம் செய்தல | 01 | - | 02 | - | - | - | - | - | 02 | 05 | 03 | 07 | 20 |
| 12 | காதலித்த பெண்ணை திருமணம் செய்ய மறுத்தல் | 19 | 06 | 08 | 20 | 09 | 14 | 11 | 12 | 04 | 05 | 02 | 01 | 111 |
| 13 | சீதனக்கொடுமை | 07 | 03 | 04 | 02 | 10 | 01 | 03 | - | 01 | - | - | 01 | 32 |
| 14 | முன் செய்த திருமணத்தை மறைத்து திருமணம் செய்தல். | 05 | 05 | 06 | 06 | 01 | 01 | 01 | - | - | - | - | - | 25 |
| 15 | திருமணப்பதிவு செய்த பின் திருமணம் செய்ய மறுத்தல் | 02 | 01 | 01 | - | - | - | - | 01 | - | - | - | - | 05 |
| 16 | முன்பின் பல திருமணங்கள் செய்து பெண்ணை ஏமாற்றல் | - | - | - | 02 | 02 | 02 | 02 | 02 | 01 | - | - | - | 11 |
| 17 | வேறுகுற்றங்கள் | - | 01 | | 01 | - | - | - | - | - | - | - | - | 02 |
| | மொத்தம் | 178 | 126 | 132 | 129 | 133 | 140 | 116 | 102 | 68 | 93 | 75 | 105 | 1397 |

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் கிளை நூலகம்.

## 01-01-1993 முதல் 31-12-1993 வரை யாழ்.குடா நாடு.

| இல. | பெண்களுக்கெதிரான குற்றங்கள் (பிரிவுகள்) | தை | மாசி | பங் | சித். | வைகா. | ஆனி | ஆடி | ஆவ | புர. | ஐப். | கார். | மார். | மொத் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | திருமணம் செய்த பெண்ணை விட்டு வேறு பெண்ணை மணத்தல் | 01 | - | 02 | 01 | - | 01 | 02 | 01 | - | - | 02 | 02 | 12 |
| 02. | பெண்ணை கொடுமைப்படுத்தல். | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 03. | பெண்ணுடன் சேட்டை. | 01 | 01 | 01 | - | 04 | - | 02 | 04 | - | - | 03 | 02 | 18 |
| 04. | பெண்ணை திருமணம் செய்வதாக ஏமாற்றி, கர்ப்பம் தரிக்க வைத்துப்பின் திருமணம் செய்ய மறுத்தல். | 05 | - | - | 01 | 01 | 05 | 02 | 01 | 01 | - | 01 | 02 | 19 |
| 05. | பெண் கடத்தல். | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 06. | திருமணம் செய்து பின் பெண்ணை விட்டுப் பிரிதல் | - | 01 | - | - | - | - | - | - | - | - | . | - | - |
| 07. | பெண்ணை அடித்து அவமானப்படுத்தல். | 20 | 02 | 04 | 05 | 04 | 01 | 05 | 04 | 01 | - | 04 | 03 | 60 |
| 08. | அவமானப்படுத்தல். | 01 | - | - | - | - | - | - | - | - | - | - | - | 01 |
| 09. | பெண்ணை அடித்து மானபங்கப்படுத்தல். | - | - | - | - | 11 | 01 | - | - | 01 | 02 | 05 | 06 | 26 |
| 10. | மானபங்கப்படுத்தல். | - | 02 | 01 | 02 | 03 | - | 01 | 01 | - | - | - | - | 10 |
| 11. | காதலித்த பெண்ணை விட்டு வேறு திருமணம் செய்தல். | - | - | - | - | - | - | - | - | - | - | - | 01 | 01 |
| 12. | காதலித்த பெண்ணை திருமணம் செய்ய மறுத்தல். | 02 | 01 | - | - | - | 01 | - | - | - | - | 01 | 01 | 06 |
| 13. | சீதனக்கொடுமை | | | | | | | | | | | | | |
| 14. | முன்செய்த திருமணத்தை மறைத்து திருமணம் செய்தல். | - | - | - | - | - | - | - | - | - | - | 01 | - | 10 |
| 15. | திருமணப்பதிவு செய்த பின் திருமணம் செய்ய மறுத்தல். | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 16. | முன்பின் பல திருமணங்கள் செய்து பெண்ணை ஏமாற்றல் | - | 01 | - | 01 | - | - | - | - | - | - | - | - | 02 |
| 17. | வேறுகுற்றங்கள் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| | மொத்தம் | 30 | 14 | 08 | 10 | 23 | 09 | 12 | 11 | 03 | 02 | 17 | 18 | 157 |

இவை தமிழீழக்காவற்துறைக்கு வந்த பிரச்சனைகள். ஆனால் இவற்றைவிட வெளியில் வராத பிரச்சனைகள், நிறைய இருக்கின்றன. 'இப்பிரச்சனை வெளியில் வந்தால் என் குடும்பமானம் போய் விடும். சமூகத்தில் அவப்பெயர் கேட்கவேண்டி வருமே' என தங்களுக்குள் தமது பிரச்க்னைகளைப் புதைத்து வைத்துக்கொண்டு பெண்கள் வாழ்கிறார்கள்.

காதலித்துப் பெண்ணைக் கைவிடுதற்குற்றங்கள் அதிகரித்துச் செல்கின்றது. இவற்றுள்ளும் பெண்ணைக் குழந்தைக்கு தயாக்கி விட்டு ஆண், 'தான் இதற்கு பொறுப்பில்லை' என்று கைகழுவி விட்ட சம்பவங்கள் நிறைய. தகப்பன் பெயர் பதியாத குழந்தைகள் தமிழீழத்தில் வளருகிறார்கள். என்பது ஜீரணிக்கமுடியாததொன்று, பெண்ணைத் தாயாக்கிவிட்டு ஆண் தமிழீழத்தை விட்டு தலைமறைவாகிய சம்பவங்கள் நிறைய வந்துள்ளன. இவற்றுள் ஏராளமான பெண்களினதும் ஒன்றுமே அறியாத பச்சிளக்குழந்தைகளினதும் எதிர்காலம் கேள்விக்குறியான நிலையில் இருக்கின்றது, கிராமப்புறங்களின் அடிமட்ட மக்களின் வாழ்க்கையில் இச் சம்பவங்கள் பரவலாகநடைபெற்றுள்ளன. கிளிநொச்சி காவற்பணிமனையில் முறைப்பாடு செய்யப்பட்ட வழக்குகளில் இவ்வாறான சம்பவங்கள் நிறையவே காணப்படுகின்றன.

வாழ்க்கையிற் குறிக்கோளற்ற தன்மைகளும் அறியாமை இருளும் பெண்களை இத்தகைய துன்பங்களுக்கு உட்படுத்தியிருக்கிறது. பின் தங்கிய கிராமப்புறத்தைப் பொறுத்தவரை பெண்களின் எழுத்தறிவு வீதம்மிகமிக குறைவு. தங்கள் கையெழுத்தைக்கூட எழுதமுடியாதவர்களாக இன்னும் பெண்கள் வாழ்கிறார்கள். நாட்டில் நடப்பவை என்ன? எதிர்காலத்தில் நாம் என்ன செய்யப்போகின்றோம் என்பதுபற்றிய விளக்கம் இல்லாதவர்களாகப் பெண்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதிற் குற்றம் சுமத்தப்படவேண்டியவர்கள் இவ்வாறான நிலையில் காணப்படும் பெண்களின் பெற்றோரே. சாதாரண அடிப்படைக் கல்வியையாவது பெண்கள் பெற்றிருக்க வேண்டும் என்பதில் பெற்றோர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

ஒவ்வொரு பெண்ணின் வாழ்க்கையும் சிறந்த முறையில் நெறிப்படுத்துவதற்கு பெண்களிற்கு தன்நம்பிக்கை ஊட்டப்படவேண்டும். பெண் என்பவள் தன் சுயமுயற்சியால் பொருளாதாரத்தில் முன்னேற வழிசமைக்க ஒவ்வொரு பெற்றோரும் முயல வேண்டும். இதன் மூலம் பெண் சார்ந்து நிற்கின்ற தன்மைகள் படிப்படியாகக் குறையும்.

எல்லாவற்றுக்கும் மேலாக அர்த்தமற்ற முதிர்ச்சியடையாத காதற்திருமணங்கள் பெண்களை இத்தகைய துன்பங்களுக்குள் புதைக்கிறது. வாழ்க்கை பற்றிய எதிர்கால நோக்கங்களின்றி பாலினக்கவர்ச்சியால் ஏற்படும் உறவுகள் இத்தகைய நிலைக்கு கொண்டுவந்திருக்கின்றது என்பது அநேக பிரச்சனைகளிலிருந்து தெரியவருகின்றது.

எனவே ஒவ்வொரு பெண்ணும் தன் வாழ்க்கைபற்றிய நோக்கங்களையும் குறிக்கோள்களையும் தனக்குள் கொண்டிருக்க வேண்டும். சமுதாய அறியாமை இருலிருந்து விடுபட்டு வெளியுலகத்தோடு தன்னைப் பிணைத்துக்கொண்டு தன்னளவில் நம்பிக்கைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பெற்றோர்கள் தங்கள் பெண்பிள்ளைகளுக்கு திருமணம் முடிப்பதிற்காட்டும் அவசரம், எந்த விலைகொடுத்தாவது அவர்களைக் கணவன் வீட்டிலேயே இருக்க வைப்பது போன்றவற்றில் காட்டும் தீவிரத்தை தமது பெண்பிள்ளைகளை அறிவு ரீதியாக வளரச்செய்வதிற் காட்டவேண்டும். இதன் மூலம் பொருளாதார நிலையில் தனித்து நிற்கவழி வகை செய்தல் வேண்டும்.

---

(சென்ற இதழ் தொடர்ச்சி)

## வாழத்தான் பிறந்தோம் . . .

றுத்தும். எந்த இக்கட்டிலும் எந்த நெருக்கடிகடியிலும் எப்படி விடுபடுவது, எப்படி வாழ்வது என்னும் நேரான எண்ணமே வலுப்படவேண்டும். எதிர்மறையான எண்ணங்களை அறவேவிலக்க வேண்டும். வாழ்க்கை நோக்கங்களையும் கொள்கைகளையும் தெளிவாகச் சிந்தித்து நெறிப்படுத்துவதில் நாம் குறியாக நிற்போமானால் வேண்டாத உள்த் தாக்கங்களைத் தவிர்க்கலாம். உணர்ச்சிகளுக்கு வேலைகொடுக்காமல் அறிவுக்கு வேலைகொடுத்து நிற்கவேண்டும்.

''தற்கொலை செய்யத் தோன்றுகிறதா?

அமைதியாக ஐந்து நிமிடங்கள் ஒரு பக்கமாகச் சென்று அமருங்கள்,

'தற்கொலை செய்து கொள்வதால் என்ன சாதிக்க நினைக்கின்றீர்கள்? தற்கொலை செய்து கொள்ளாமலே அவற்றை சாதிக்க முடியாதா?

இவற்றை ஒன்று, இரண்டு மூன்று என்று குறிப்பிட்டு அலசிப்பாருங்கள்; தற்கொலை செய்யும் எண்ணமே உங்களைவிட்டு மாறிவிடும்''

என்கிறார் ஓர் உளவியல் அறிஞர். எனவே குறிப்பிட்ட கணநேரம் தோன்றும் உணர்ச்சிக்கு வேலை கொடுக்காமல், அறிவுக்கு வேலை கொடுத்தால் எவருக்கும் தங்களை மாய்த்துக்கொள்ள வேண்டிய உணர்வு வராது.

இறுதியாக, இத்தகைய உணர்வு உந்தலில் நிற்பவர்களுக்கு ஆற்றுப்படுத்தல் மிகமிக அவசியமானது. இந்த ஆற்றுப்படுத்தற்சிகிச்சை முறையானது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் போது சிறந்த பயனைப் பெறக்கூடியதாக இருக்கும். பாதிக்கப்பட்டவரை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவர முடியும். எனவே இந்த உள ஆற்றுப்படுத்தற் சிகிச்சை முறையைப் பரவலாக்கி, பெண்களுக்குத் தன்னம்பிக்கையையும் சுய சிந்தனையையும் எந்தப் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்கின்ற தன்மையையும் வளர்ப்பது சமுதாயத்தின் கடமை

# அலையெறியும் கடல் நடுவே ஆர்ப்பரிக்கும் பெண்புலி



,, அது பலாலியின் கட்டுவன் பகுதி, 1990-ஆம் ஆண்டின் இறுதிப் பகுதி. இரவிரவாகக் கண் விழித்து, நிலைகளில் நின்று காவற்கடமையில் ஈடுபட்ட நாங்கள், காலையில் முன்னணிக்குச் செல்வோம்.

அன்றும் அப்படித்தான்.

எமது நிலைகளிலிருந்து புறப்பட்டு முன்னனியை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தோம். போகும்வழியில் ஒருபள்ளத்துக்குள், எம்மைத் தாக்கும் நோக்குடன் இராணுவம், பதுங்கியிருந்தது. அதை நாங்கள் கவனித்துவிட்டோம். உடனே தாக்க ஆரம்பித்து விட்டோம்.

அன்று நடந்த மோதலில் இராணுவம் தோற்றுப் பின் வாங்கி ஓடிவிட்டது. அன்றைய மோதலில் கப்டன் அஜித்தாக்கா, கப்டன் ஆஷாக்கா, ரமா ஆகியோர் வீரச்சாவடைந்தனர். தேனுஜாக்கா முன்னுக்கு நின்று நன்றாகச் சண்டை பிடித்தார். காயமடைந்த நிதி என்ற போராளியை நான் தூக்கிக் கொண்டு பின்னே வந்தேன். அப்போதுதான் அந்தச் சம்பவம் நடந்தது.

பின் வாங்கி ஓடியஇராணுவத்தினர் தோல்வி தந்த அவமானத்தைத் தாங்க முடியாமல் பலாலியிலிருந்து நாமிருந்த பக்கமாக எறிகணைகளை ஏவினார்கள். ஒரு எறிகணை எனக்கருகில் விழுந்து வெடித்ததில் நான் தூக்கி எறியப்பட்டேன்.

கீழே விழுந்த நான் கைகளை ஊனறி எழ முயன்றபோது, முடியவில்லை. மீண்டும் மீண்டும் முயற்சித்தபோதும் முடியாமல் போன பின்னரே நான் திரும்பிப் பார்த்தேன். எனக் கருகில் மணிக்கூடு கட்டப்பட்ட கையொன்று துடித்துக் கொண்டிருந்தது.

எனது இடது கையைக் காணவில்லை. தோளில் இருந்து குருதி ஓடிக்கொண்டிருந்தது. வலது கை துண்டிக்கப்பட்டும், முழுவதும வெட்டுப்படாத நிலையிலும் தொங்கிக் கொண்டிருந்தது.

என்னை உடனேயே வைத்தியசாலைக்கு கொண்டுவந்துவிட்டார்கள். வைத்தியசாலைக்கு வந்த பின்னர் தான் எனது இடது காற் பாதத்தின் ஒரு பகுதி துண்டிக்கப்பட்டிருந்ததை அவதானித்தேன். நான் இறந்து போய் விடுவேன் என்றே பலரும் எண்ணினர். என்னை வைத்திய சாலையில் அனுமதித்தபோதுகூட சில வைத்தியர்கள் எனக்குக் கைகள் இல்லையென்பதால் 'சேலைன்' ஏற்றினார்கள். பலரது கணிப்புகளையும் பொய்யாக்கிக் கொண்டு, அண்ணைனைப் பார்க்காமல் சாவதில்லை, என்ற உறுதியுடன் நான் தப்பிவிட்டேன்.''

என்று தனது அனுபவத்தை எம்மிடம் விவரிக்கின்றார் செல்வா. இரண்டு கைகளில்லை என்பது இவரது உடற்குறையே தவிர, மனத்வளவில் இவர் அசாதாரணமான நம்பிக்கையுடனே வாழ்கின்றார். இவரது வாழ்வு பலருக்கு நம்பிக்கையைத் தரும் என்பது தெளிவு: கைகளில் காயம் ஆறிய பின் நான் படித்தேன். பின்னர் இலத்திரனியல் படித்தேன். பின்னர் தட்டச்சுப் (கால் விரல்களால்) பழகினேன்.

இப்படியே போய்க்கொண்டிருந்த போதுதான் ஒருநாள் வந்த ஒலி - ஒளிப்படப் பிரதி ஒன்றைபபார்த்தேன். அதில் ஒரு கையும் ஒரு காலுமில்லாத ஒரு தம்பி நீந்துவதைப் பார்த்தேன். ஏன் என்னால் நீந்தமுடியாது என்ற எண்ணம் என்னுள் விழுந்தது.

நீந்திப் பார்த்தேன். நீந்தக் கூடியதாக இருந்தது. இப்போது அலையெறியும் கடலில் முந்நூறு மீற்றர் தூரம் வரை என்னால் நீந்த முடிகிறது.''

எதையும் தாங்கும் இதயமும், வாழ்க்கையை எதிர்நீச்சல் போட்டுக் கடக்கும் நம்பிக்கையும் செல்வாவைப் பார்த்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய விடயங்கள், துணிச்சலுக்கும் அபாரா தன்னம்பிக்கைக்கும் பெயபோன விடுதலைப் புலிகளிடையே இந்தப் பெண்புலி ஒரு சாதனை வீராங்கனையாகத் திகழ்கின்றார்.



## முழங்காமல் . . .

இறுதியாக ஒருநாள் இராணுவத்தினரைப் பதுங்கியிருந்து நாம் தாக்குவதெனத் திட்டமிட்டோம். நாம் தாக்குவதற்குச் சென்றபோது இராணுவத்தினர் அவ்விடத்திலிருந்து பின்வாங்கியிருந்தனர். ஆனாலும் நாங்கள் தயார்ப்படுத்தப் பட்டோம். ஏனென்றால் நாம் நீண்ட தூரத்துக்கு அப்பால் போய் தாக்குதலொன்றை நடாத்த வேண்டியிருந்தது. சிலவேளை சண்டை நடக்கலாம். நடக்காமலும் விடலாம் என்று எமக்குக் கூறப்பட்டது. நாம் புறப்பட்டோம்.

அப்போது மதியமாகிவிட்டதால் உணவு எடுப்பதற்குச் சில போராளிகள் போய் வந்தார்கள். உணவு எடுத்துக் கொண்டு வந்தவர்களுள் ஒருத்தி அழுது கொண்டிருந்தாள். ஏனென்று நான் கேட்டபோது, தனது அண்ணன் அருகிலுள்ள தளத்தில் நிற்பதாகவும், இயக்கத்துக்கு வந்தபின் ஒருமுறை கூட அவரை தான் சந்திக்கவில்லை என்றும்கூறினாள். ஒரே களத்தில் அண்ணனும் தங்கையும். யாருக்கு எப்போது என்ன நடக்கும் என்பதை யாராலுமே சொல்லமுடியாது அல்லவா? எமது பொறுப்பாளர் அவளை அண்ணனுடன் கதைக்குமாறு அனுப்பினார்

அணிகள் தயார் நிலையில் நின்றன. அன்றுதான் அவர்கள் ஒருவரின் இயக்கப் பெயரை மற்றவர் கேட்டு அறிந்துகொண்டார்கள் சில நிமிட உரையாடலின் பின் அவர்கள் தத்தம் அணிகளுடன் வந்து சேர்ந்து கொண்டார்கள்.

இதேபோல் இன்னுமொரு சம்பவம். ஒரு ஆண் போராளி, பெண் போராளியைப் பார்த்து தன்னுடைய தங்கை போலிருக்கின்றது என்று சொன்னார். ஆனால் பெண் போராளிக்கு அவரை அடையாளம் தெரியவில்லை. அவர்களிருவரும் சொந்தப் பெயர்களையும், பெற்றோர்களின் பெயர்களையும், முகவரியையும் சொல்லிப் பார்த்துத்தான் தாங்களிருவரும் அண்ணனும் தங்கையும் என்பதை உறுதி செய்து கொண்டார்கள். ஆண்போராளி இயக்கத்துடன் இணைந்து நீண்டகாலமாகியிருந்ததாலும், அதன் பின் ஒரு முறையும் அவர் தனது குடும்பத்தைச்சந்திக்காததாலும் தன் தங்கை இயக்கத்தில் இணைந்தது அவருக் தெரியாமலிருந்ததாலுமே இந்தச் சிக்கல் ஏற்பட்டது. அவர்களிருவருக்கும் தம்மை நினைத்துப் பார்க்கச் சிரிப்பு வந்துவிட்டது. எத்தனையோ ஆண்டுகளின் பின் ஒரு அண்ணனும் தங்கையும் களத்தில் சந்தித்துக்கொண்டார்கள்.

நாம் மிகவும் எச்சரிக்கையுடன் பயணமானோம். ஒற்றையடிப் பாதையில் நல்ல இருள். முன்னுக்குப்போய்க் கொண்டிருக்கின்ற ஆளையே தெரியவில்லை உரிய இடத்துக்கு வந்ததும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மரங்களின் பின்னே மறைந்து கொண்டோம் எதிரியின் வரவுக்காகக் காத்திருந்தோம் எதிரியின் நடமாட்டத்தையே காணோம் நீண்ட நேரம் காத்திருந்து விட்டு எல்லா இடங்களிலும் தேடிஅலசினோம். ஒருவருமேயில்லை. என்பதை நிச்சயப்படுத்திக் கொண்டு திரும்ப முயன்ற போது, எதிரியின் கண்ணிவெடி ஒன்று மிதிபட்டுவெடித்ததில் போராளி ஒருவர் காயப்பட்டார். அவரையும் சுமந்து கொண்டு நாம்திரும்பி வந்தோம்.

★★★

பலத்த இடிமின்னலுடன் இலங்கை இராணுவம் ஆரம்பித்த இந்த இராணுவ நடவடிக்கை எமது தாக்குதலின் பின் முழங்காமல் மழைபொழியாமல் அமைதியாக ஓய்ந்தது.

# மனநோயினால் ஆண்களைவிட பெண்களே அதிகம் பாதிப்படைவு

மக்கட் குழுவில் நிலமைகள் சாதாரணமாக இருந்தாலும் கூட பெண்களுக்கு மனநோய்ச் சிக்கல்கள் ஏற்படலாம். காரணம் பெண்கள் ஆண்களைவிடச்சிக்கல்களுக்கு அல்லது நெருக்கடிகளுக்கு வேறுபாடானமுறையில் முகம் கொடுப்பதாலும் மக்கட் குழுவில் பெண்கள் மனைவியாகவும், தாயாகவும், மகளாகவும், தொழில் புரிபவர்களாகவும், பிளைகளைப் பெற்றும் வளர்த்தும் கண்காணிப்பவர்களாகவும் பல நெருக்கடி நிலைமைகளுக்கு ஆளாகிறார்கள்.

உலக சுகாதார அமைப்பின் பெண்களின் உளவியல் மனோநிலைச் சுகாதாரம்'' என்னும் புதிய ஆவணம் குறிப்பிட்டபடி பெண்களே ஆண்களைவிட மனோநிலை சுகாதாரச் சிக்கல்களுக்கு ஆளாகிறார்கள் என்று கூறுகிறது அடுத்து உலக சுகாதார அமைப்பும் அவுஸ்ரேலியாவின் மெல்போர்னில் உள்ள சுகாதார அமைப்புக்களும் சேர்ந்து ''பெண்களும் சுதாதாரமும்'' என்ற தலைப்பில் தயாரித்த அறிக்கையில் மனோவியல் சுகாதரம் பெண்களின் முக்கிய சுகாதாரச் சிக்கலாகக் கணிக்கப் பட்டுள்ளது எனக் கூறப்பட்டுள்ளது. அடுத்தபடி பெண்கள் மக்களாய பொருண்மிய வேறுபாடுகள் காரணமாக பல நெருக்கடிகளை சமாளிக்க வேண்டி இருப்பதாலும் மனோவியல் சுகவீனங்களுக்கும் ஆளாகநேரிடுகிறது எனவும் அது கூறுகின்றது.

ஆண்களைவிடப் பெண்களே கூடுதலாக உளவியல் சுகாதார உதவிகளைப் பெற வாய்ப்பு உள்ளவர்களாக இருந்தும் பெண்கள் தான் உளவியல் சுகாதாரச் சிக்கல்களுக்கு கூடிய அளவு பாதிக்கப்படுகிறார்கள் அதற்குப் பெண்களின் உடல்நிலை அல்லது அவர்களின் மக்களாய கடமைதான் காரணமாகும் கூடுதலான மனமுறிவுகள் அல்லது தனித்தன்மை, சக்தியற்ற நிலைமை மற்றும் வறுமை போன்றகாரணங்களால்மனோநிலைப் பாதிப்பு ஏற்படுகின்றது. ஆண்களை விடப் பெண்களே இவற்றை அதிகமாக அனுபவிப்பதால் அவர்கள் மனேநிலைப்பாதிப்புக்குள்ளாகின்றார்கள்.

### நெருக்கடி நிலைக்கு ஆளாகும் அபாயம்

சாதாரண நிலைமைகளிலும் கூட பெண்களுக்கு மனோநிலைப் பாதிப்பு ஏற்படலாம். ஏனெனில் ஆண்களிலும் பார்க்க வேறுபட்ட நெருக்கடிகளை எதிர்கொள்ளும் பெண்கள் மக்கட் குழுவில் தாயாகவும், மகளாகவும், மனைவியாகவும் தொழிலாளியாகவும், பிள்ளைபெற்று வளர்ப்பவர்களாகவும் பல தரப்பட்ட பொறுப்புக்களில் ஈடுபட்டு நெருக்கடிகளையும் பாரிய பொறுப்புக்களையும் தாங்கும் ஆற்றலாக விளங்குகிறார்கள்.

''இன்றைய மக்கட்குழு அமைப்பின் விளைவாக பெண்கள் பதற்றத்திற்கும் நெருக்கடி நிலைகளுக்கும்'' ஆளாகின்றார்கள் என அறிக்கை கூறுகிறது.

உணவு காரணமாக பாதிப்பு அடைபவர்கள் 90 வீதத்துக்குக் கூடுதலாகப் பெண்களாகும். பொதுவாக உடல்நிலை எல்லாப் பெண்களுக்கும் ஒரேவிதமாக அமைவது சடுமை, அத்துடன் ஆண்களின் நிலையைக் கொண்டு பெண்களின் உளவியல் விடயங்களைமதிப்பீடு செய்வதும் தவறாகும் என அவ்வறிக்கை கூறுகின்றது.

அதிகமான விரிவாக்கம் அடைந்த நாடுகளில் பெண்கள் மனோவியல்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## நூல் அறிமுகம்


'உடையாத விலங்குகள்' (UNBROKEN CHAINS) என்ற பெயரில் ஆங்கில மொழியிற் புத்தகம் ஒன்று வெளிவந்துள்ளது.

யாழ்ப்பாண சமூதாயத்தில் சீதன வழமையானது எத்தகைய அழுத்தத்தை ஏற்படுத்தி நிற்கின்றது, சமூகத்தின் பாரம்பரிய உறவாக எவ்வாறு ஆழப்புரையோடி நிற்கிறது என்பதை இந்நூல் மிகுந்த சமூகப் பொறுப்புணர்வோடு விளகிச் செல்கிறது.

சீதன வழமையின் கொடிய தன்மையையும் அது இந்த சமூக வாழ்வோடு பின்னிப்பிணைந்து, ஒட்டு மொத்தமான சமுதாய வளர்ச்சிக்கு எந்தளவில் இடையூறாக நிற்கிறது என்பதையும் ஒரு ஆய்வுக் கண்ணோட்டத்தோடு எதுவித மிகைப்பாடும் இல்லாமல் விரித்துச் சொல்கிறது.

சீதன வழமையானது முன்னைய நிலவுடமைச் சமூகத்தின் எச்சசொச்சங்களில் ஒன்றாக, சாதியம் என்பவற்றோடு ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டு சிக்கல் நிறைந்த ஒன்றாகவே வளர்ந்து வந்திருக்கிறது. இம்முறை பெண் ஒடுக்குமுறையின் ஒரு முக்கிய அம்சமாக, சமுதாயத்தின் சாபவேராகவே நிற்கிறது, பெண்களின் வாழ் நிலையை மிகமோசமாப் பாதித்து நிற்கும் காரணியாக இது எவ்வாறு மாற்றம் கொண்டுள்ளது. என்ற விடயம் நூலின் ஒவ்வொருபகுதியிலும் ஆழமாக விபரிக்கப்பட்டுள்ளது.

'உடையாத விலங்குகள்' என்ற இந்த நூல் இருபகுதிகளாப் பிரிக்கப்பட்டு, முதலாவது பகுதியில், யாழ்ப்பாண மக்களின் தேசவழமைகள் எவ்வாறு ஒல்லாந்தர்களால் தொகுக்கப்பட்டது. என்பது பற்றியும் அந்தச் தேச வழமையில் குறிப்பிட்ட தாய்வழிச் சொத்துரிமை பற்றியும் இது எவ்வாறு தற்போதைய சீதன முறமைக்கு அடிகோலியது. என்பது பற்றியும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.




இதன் இரண்டாவது பகுதியில் சிங்களப் பேரினவாத அரசின் திட்டமிட்ட இன அழிப்பு, பொருளாதாரப்பின்னடைவு, வெளிநாடுகளுக்குச் செல்லல் போன்ற காரணங்களால் சீதனம் எந்தளவில் உயர்ந்து செல்கிறது என்பது பற்றிய தற்கால நடைமுறைகளின் உண்மை நிலை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இதில் முக்கிய விடயமாக தற்போது உச்சகட்டத்தில் போய்க்கொண்டிருக்கும் நன்கொடை (டொனேசன்) முறையின் கொடிய தன்மை எடுத்துக்கூறப்படுகிறது.

இப்பகுதியின் கருத்துக்களூடே பெண் எவ்வாறு தாழ்த்து மதிக்கப் படுகிறாள். சாதாரண சொத்துக்களோடு வைத்துப் பேரம்பேசப்படுகின்ற இழிநிலைக்கு அவள் தள்ளப் பட்டதன் காரணம் என்ன என்பது பற்றியும் கூறப்படுகிறது.

மொத்தத்தில் இந்நூல் ஒரு காலத்தின் தேவைவெளிப்பாடு. விலைவாசி ஏற்றத்தை விடசீதன ஏற்றங்கள் மிகையாகச் சென்றுகொண்டிருக்கும் காலம், ஒரு பெண்ணின் திருமணவாழ்வை நிர்ணயிக்கும் காரணியாக சீதனத்தொகைகள் விளங்குகின்றன. இதனால் ஒருபுறம் திருமண வயது கடந்த பெண்களின் தொகையும் மற்றும் அவர்தம் பொற்றோரின் ஏக்கப்பெருமூச்சுகளுமே எஞ்சிநிற்கிறது.

இந்த நிலமைமாற்ற விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பின் சீதனப் பிரசார நடவடிக்கைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் நேரம் இந்நூல் வெளிவந்திருப்பது மிகப் பொருத்தமுடையது.

இந்நூலின் ஆசிரியையான 'அடேல் ஆன்' (திருமதி அன்ரன் பாலசிங்கம்) அவுஸ்ரேலியாவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தமிழீழத்தை தமது தாயகமாக வரித்துக் கொண்டவர். நீண்டகாலமாகவே விடுதலைப்புலிகளோடு தம்மை இணைத்துக்கொண்ட இவர் பெண் விடுதலை தொடர்பான பலகட்டுரைகளை எழுதியுள்ளார்.

1984 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட பெண்களும் புரட்சியும் என்ற நூலும், 1993 இல் வெளிவந்த 'புலிகள்இயக்கத்தின் பெண் போராளிகள்' (WOMEN FIGHTERS OF LIBERATION TIGERS) என்ற நூலும் இவரால் எழுதப்பட்டவையாகும்.

# நெஞ்சில் நெருப்பெரிக்கும்

மாரி காலம்
மேகம் தரை முட்டி நீரெறியும்
இடிகளின் எக்களிப்பில்
மின்னல் பிறக்கும்.
வற்றல் நிலங்களில்
எட்டிப் பார்த்த
பசுமைச் சிரிப்பு.
நேற்றும் இன்றும்
வானம் பார்த்தவரின் கண்களில்
நம்பிக்கைக் கீற்றுப் படரும்.
புலப் பெயர்வும் மாரியும்
உள்ளச் சுமையிட,
குடியிருப்புக்கள்
வெள்ளத்தில் நீந்தித் தவிக்கும்.

காலம் சுருண்டு விரிந்த
இந்தப் பக்கங்களில்
சோம்பல் முறித்துக் கொண்டு
புதிய பிறப்புக்காய்
தேசம் தயாராகும்.
குளிர் குளித்த வீதிகளில்
நம்பிக்கைக்கான பயணங்கள்
மீண்டும்,
புலரும் வசந்தத்திற்கான ஆயத்தம்

மழை —— பெருமழை
மரம் விறைக்க
கரிய இருட்கரங்கள்
கதிரவனை சூழ்ந்து கண்பொத்த

கொடும் மழை
ஆயினும்
துப்பாக்கிகள் வாய்திட்டிக் கொள்ளும்

கனல் தெறிப்பில்
நெஞ்சக் கொதிப்போடு
மாரியைக் கையுயர்த்தி வரவேற்கும்.

வருடப் பூமலர்த்தி மணம்வீசி
காம்பவிழும் கடைசிப் பொழுது
இடியிடிக்க விழித்துக் கொண்ட தேசத்தில்

அந்த இரவின்
வருகைக்கான ஆயத்தம்.
காலம் கண்விழித்து நிற்க
ஒரு காலப் பொழுதின்
கதை எழுதி விரித்த
அந்தக் காவியங்களைக்
காலம் தனக்குள் நிறைவு கொள்ளும்.

தேசத்து வீதிப் புழுதியடங்கி
புல் நிமிர்ந்து
வீதி மூகட்டை நிறைத்த
வாசகம் பார்த்து வாய்திறக்கும்

எல்லைகளின் மனித வேலிகளாய்
மண்ணில் உதிரப் பூச்சொரிய
காற்றில் மூச்சாதிர்த்து

கண் நிறைந்த
அந்தக் காவலர்களுக்காக ...
சிறகடித்த இளமைக் கனவுகளின்
இறக்கைகளை உதிர்த்து விட்டு
தேசக்கனம் சுமந்த தோள்களுக்காக ......
இதயம் கனக்க
நெஞ்சிடை எழுந்த
அனல் அலைகளின் குறியீடாக
கைகளில் ஒளிரும் தீச்சுடர்
நிறைந்த சாமப் பொழுது
அதன் வருகைக்கான
புதிய உணர்வுகளில்
தேசம் நனைந்து நிற்கும்.

பிரித்த தொடர்களில் நெஞ்சிறுக்கி
கண்வழியும் நீரைக் கல் சமைத்து
துப்பாக்கிகளோடு
உறவாடிய தீக்கொழுந்துகள்
மனதால் மலர் சொரிந்து
கனவுகளின் உயிர்ப்புக்காக
கனலேந்திய விழிகளோடு



கால் நடக்கும்.
மின்னும் இரவில்
காலை வெள்ளியின்
கண் திறப்புக்காக
ஒப்புக் கொடுத்த
உறுதிக் கணத்துக்காக
குழிசுமந்த தாயகத்தின்
மீட்சிக்கான பாதைகளில
அவை நடக்கத் தொடங்கும்.

அந்த இரவும்
மணியின் நாதமும்
இருநிமிட மௌனப் பொழுதும்
நெஞ்சில் நெருப் பெரிக்கும்.
திப்பந்த ஒளிர்வில்
நிறைந்து நிற்கும்
தேச மூச்சுக்களை
ஒருகணம் நெஞ்சழுத்திப் பார்க்கும்.

தென்னங்காற்றின் இடைவெளியூடே
தரைவந்து முட்டுகின்ற
நிலவுக்கதிரின் வருடலில்
தாய்மடியில் முகம்புதைத்து நின்ற
மாலைப் பொழுதின் மகிழ்வைத்துறந்து,
எல்லையோர வெளிகளில்
ஊதிநின்று ,உரசும்
உப்புக் கடல்களில்,
எரிகின்ற கதிரவனின்
ஒளிக்குளிப்பில்,
தங்களை தமது இலட்சியத்துக்காக
உருகிக்கொண்ட
அற்புதமான மனிதர்கள்.

தலைசாய்த்த தளிர்கள் மேவி
மோதியடித்த காற்று
நெஞ்சுக்குள் சில்லிடும்,
நினைவுப் பூக்களாய் விரிந்த
கல்லறை எழும்பாத
முகங்கள் ஒருகணம்
கண்களில் நிறையும்.
உடல் தூகிப்போன
தீபங்களை நினைந்து
விழியோரம் இருதுளி
நீர் கசியும்

தோலுக்குள் புதையுண்டு
தசைகீறி வெளிவந்த
வெடித்தழும்புகள்.
நேற்றுவரையும் எம்மோடு
ஆடிப்பாடிய நினைவுகளில்......
நன்றாகப் பாருங்கள்
இதே உங்கள் மூன்
அவர்களின் அந்த
மென்மையான சிரிப்பு
உதட்டளவில் வெளித்தெரியும்
முத்துப் புன்னகை ......

இது கார்காலம்
திரண்ட கருமுகில்கள்
மோதியிடித்து
மழைத் துளிப் பிரசவிப்புக்காக
இனி வேகமெடுக்கத் தொடங்கும்.

- அணங்கு -

வாசகர்களிடமிருந்து கருத்துக்களை வரவேற்கிறோம்.

தொடர்புகட்கு:

சுதந்திரப்பறவைகள்,
வெளியீட்டுப் பிரிவு,
கோண்டாவில்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்